Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22 , நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

தரமான
★ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞு ஐப்பசி மீ 14 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 18 ( 30 - 10 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 222

## கோப்பாயில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம் அக் 30 கோப்பாய் ஆசிரியர் சலாசாலைக்குச் சமீபமாக நேற்று நண்பகல் சுமார் 1.30 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று நடைபெற்றது

இதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விவரம் ஏதும் தெரியவரவில்லை. (ஓ)

## அர்ச்சகர் சுட்டுக் கொலை

செல்வச்சந்நிதி ஆலய அர்ச்சகரான வடிவேல் சிவானந்த ஐயர் (வயது 63) வெள்ளி இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்

விசாரணைக்கென அழைத்துச் சென்ற இளைஞர்களே அவரைச் சுட்டுக் கொன்றனர் என்று சொல்லப்பட்டது. (ஓ-160)

## இளைஞனின் சடலம் தாவடிச் சுடலையில்

யாழ்ப்பாணம்; அக். 30 உரும்பராயைச் சேர்ந்த சாந்தீசன் என்னும் இளைஞனின் சடலம் சூட்டுக் காயத்துடன் தாவடிச் சுடலையில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

கொலையுண்டவர் சுன்னாகத்தில் வெல்டிங் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்பவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## ★ டெலிபோன் "அவுட்"

கொழும்பு—யாழ்ப்பாணம் நேரடித் தொலைபேசிச் சேவை வெள்ளிக்கிழமை நண்பகலுடன் தடைப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி எழுதப்படும் வரை தொலைபேசிச் சேவை சீரடையவில்லை. (இ-10)

## நல்லூர்ப் பகுதி திடீர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், அக். 30 நல்லூர், முத்திரைச் சந்தி உட்பட்டபகுதிகள் நேற்று மாலை சுமார் 5-30மணியளவில் அமைதிப் படையினரால் திடீரென சுற்றிவளைக்கப்பட்டன. [ஓ]

## காசோலைக்கு ஆள் இல்லை

யாழ்ப்பாணம் அக் 30 குடும்பத் தலைவரை இழந்தவர்களின் குடும்பங்களுக்கு மரணச் செலவிற்காக வழங்கப்படும் காசோலைகளில் பதினேழு காசோலைகள் இன்னும் பெறப்படாமல் யாழ். செயலகத்தில் உள்ளன.

ஒவ்வொன்றும் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தக் காசோலைகள் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக உரியவர்களினால் எடுத்துச் செல்லப்படவில்லை. (ஓ-9)

## மத்திய வங்கி முன்னாள் கவர்னர் புதிய தூதுவர்

மத்தியவங்கியின் முன்னாள் கவர்னர் வர்ணசேன ராசபுத்ர பிரான்ஸுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஓ-எ)

## ரூபா 2,000 நிவாரணம்:

# நாளை முதல் பெயர்பட்டியல்

## செயலகத்திலிருந்து கிராமசேவையாளர் பெறுவர்

— அலுவலகச் செய்தியாளர் ஜோய் பூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம், அக்டோபர் 30

இரண்டாயிரம் ரூபா நிவாரணப் பணம் பெறுவதற்குத் தகுதி உடையவர்கள் என்று செயலகத்தினால் அங்கீகரிக்கப் பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்கள் நாளை முதல் வெளியிடப்படும்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. வை. மு. பஞ்சலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறியவர்களுக்கே இந்தப் பணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கிராமசேவையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உதவி அரசாங்க அதிபர்களூடாக செயலகத்துக்கு அனுப்பப்பட்டு வருகின்றன

இவ்வாறு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் செயலகத்தில் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

மீள் பரிசிலனை செய்து அங்கீகரிக்கப்பட்டவர்களின் பெயர் விவரப்பட்டியல்கள் கிராமசேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்தப் பெயர்கள் கொண்ட முதல் பட்டியலே நாளை 31 ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.

மேலதிக விபரங்கள் நாளை தெரிவிக்கப்படும் என்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



தேர்தல் வருகுது என்டால் உப்பிடியான இரகசியங்கள் எல்லாம் அம்பலத்துக்கு வரும் போல...!......

பாதுகாப்பு வழங்கும் வரை

## வேலைக்குச் செல்வதற்கு ரயில்வே ஊழியர் மறுப்பு

கொழும்பு, அக் 30 பாதுகாப்பு வழங்கும் வரை வேலைக்குத் திரும்ப முடியாது என்று ரயில்வே ஊழியர்கள் தொடர்ந்து கூறிவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரைப்பணயம் வைத்து வேலை செய்ய முடியாது என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

வியாழன் முதல் ரயில் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால் அன்றைய தினம் மாளிகாவத்தை ரயில் நிலையத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் இனந் தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து ஊழியர் தங்கள் பழைய கோரிக்கையை வலியுறுத்தத் தொடங்கினர்.

வேலைக்குத் திரும்பும்படி ரயில்வே திணைக்களம் கோரியும், அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை. (ஓ-எ)

## சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்க ஒரு கட்டத்தில்அழைக்கப்பட்டேன்

### பிரதமர் பிரேமதாச கூறுகிறார் கடிதங்கள் இன்றும் உண்டாம்

கொழும்பு அக் 30 சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கும்படி நான் ஒரு கட்டத்தில் அழைக்கப்பட்டேன் அது சம்பந்தமான தஸ்தாவேஜுகள், கடிதங்கள் என்னிடம் இப்போதும் உள்ளன.

பிரதமர் பிரேமதாச, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்சண்ட தகவலை வெளியிட்டார்.

வரவு செலவுத்திட்ட இடைக்கால அறிக்கையின் விவாதத்தில் கலந்து கொண்டு பிரதமர் பேசினர்.

அப்போது அவர் சொன்னதாவது:

இந்திய – இலங்கை அமைதி உடன்பாட்டின் முக்கிய காரணகர்த்தாவே ஜேனி டி மெல் தான்

ராஜீவ்காந்திஇலங்கை வந்தபோது, இந்திய அமைதிப் படையை அனுப்பும்படி அவரைக் கேட்டுக்கொண்டதே இந்த ஜேனி டி மெல் தான்.

ஜனதிபதியை தவறுக வழி நடத்தியவரே இந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் அரச அலுவலகங்கள்

### அதே இடங்களிலேயே இயங்கும்

வவுனியா அக் 30 வவுனியா- மன்னார் வீதியில் அமைதிப்படையினர் முகாமிட்டுள்ள கட்டடங்களுக்கு அருகில் உள்ள அரச அலுவலகங்களையும் பிராந்திய மருந்துக் களஞ்சியம், விடுதிகள் என்பவற்றையும் உடன் வேறு இடங்களுக்கு மாற்றுவதில் உள்ள சிரமங்கள் கஷ்டங்கள் பற்றி எடுத்துக் கூறி ஆட்சேபம் தெரிவிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் தபால் சேவை மட்டும் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம் அக் 30 யாழ் மாவட்டத்தில் உள்ளூர் தபால் சேவை மட்டுமே தற்பொழுது நடைபெற்று வருகிறது

கடந்த சில தினங்களாக கொழும்பு- வவுனியா ரயில சேவை இடை நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக வெளியூர் தபால் பொதிகள் எதுவும் யாழ்ப்பாணத்துக்கு வந்துசேரவில்லை.

இதேவேளை வார இறுதியில் நடத்தப்பட்டு வரும் கொழும்பு- யாழ் ரயில் சேவையும் நேற்று நடைபெறவில்லை.

எனினும் வவுனியா— யாழ் பஸ் சேவைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. (இ-10)

## பயனுள்ள பேச்சுக்களை தொடர்ந்து நடத்துகிறோம்

### ஈ. பி. ஆர். எல். எப் பொறுப்பாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், அக் 30 யாழ் பிராந்தியத்தில் பல்வேறு வெகுஜன அமைப்புகளோடும் பல பயனுள்ள பேச்சுவார்த்தைகளை ஆரோக்கியமான சூழ்நிலையில் மேற்கொண்டுள்ளோம்

ஈ பி ஆர் எல் எவ் யாழ் பிராந்தியப் பொறுப்பாளர் திரு. க பிரேமச்சந்திரன் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் பேசும் மக்கள் நீண்டகாலமாக துன்பங்களையும் துயரங்களையும் இழப்புகளையுமே சந்தித்து தினமும் பயபீதியுடனும் ஏக்கப் பெருமூச்சுடனும் வாழும் நிலையை மாற்றி அவர்களுக்குச் சுதந்திரத்தையும் நிம்மதியையும் மட்டுமல்லாமல் நீண்டகால இழப்புக்களை நிவர்த்திக்கும்பொருட்டு உடனடியாக புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கேற்ற

( 8ஆம் பக்கம் பார்க்க)

## ஒருங்கிணைப்புக் குழு கண்டனம்

யாழ்ப்பாணம், அக 30 தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை பகிரங்கமாகப் போராடிப் பெற்று வந்த தலைவர்கள் கொல்லப்படுவது கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இந்த வகையில் தென்மராட்சி பிரசைகள் குழுத் தலைவர் திரு. இராஜசங்கரி சுடப்பட்டதை நாம் பகிரங்கமாகக் கண்டிக்கிறோம்.

இப்படியான கொலைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சகல மக்களும் இணையவேண்டும்.

யாழ்ப்பாணம் மாணவர் ஒருங்கிணைப்புக் குழு மேற்கண்டவாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (இ)

## நடேஸ்வராக் கல்லூரி மாணவர் இருவரும் விடுதலை

காங்கேசன்துறை, அ 30 காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப கல்லூரி மாணவர்களான இரத்தினம் ஸ்ரீதரன், தர்மலிங்கம் ஸ்ரீதரன் ஆகிய இருவரும் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இதனை ஆட்சேபித்தும் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் 28 ஆம் திகதி காங்கேசன் துறையில் மாணவர்கள் மறியல் போராட்டத்திலும், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனை அடுத்தே மாணவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். (இ-68)

## தாயகம் திரும்பிய அகதிகளுக்கு வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

### இன்று அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம், அக் 30 இந்தியா விலிருந்து நாடு திரும்பிய அகதிகளில் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணி ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் குழுவினால் இன்று முதல் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் முதலில் மாதிரி வீடுகளாக 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய இன்று யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மூன்று வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் இடம் பெறுகிறது.

இந்தத் தீர்மானம் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற உயர் மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது

வீடமைப்பு சம்பந்தமாக நேற்றுநடைபெற்ற கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் குழுவைச் சேர்ந்த திட்ட முகாமையாளர் திரு. பெர்னுட் போயர், உதவி திட்ட முகாமையாளர் திரு. சிறில் யாழ் அரசாங்க அதிபர் திரு வை மு. பஞ்சலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திரு இராமநாதன், யாழ் செயலக உதவி அரசாங்க அதிபர் செல்வி; மைதிலி சோமசுந்தரம், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காலியில் கப்பல் மூழ்குகிறது

காலிக்கு அருகில கப்பல் ஒன்று பாறை ஒன்றுடன் மோதி மூழ்கிக் கொண்டிருந்ததாக நேற்று அறிவிக்கப்பட்டது.

காலி,ருஹுணு சிமெந்து ஆலைக்கு கிளிங்கர் கற்களை இக்கப்பல் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஏற்றிவந்தது.

கப்பலில் இருந்த 26 மாலுமிகளையும் காலித் துறைமுக அதிகாரிகள் காப்பாற்றிக் கரை சேர்த்தனர். (ஓ-எ)

## சுபநேரம்

30- 10 – 1988
ஐப்பசி 14
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:–
9 03 முதல் 10-33வரை
ராகுகாலம்;–
4–33முதல் 06–03வரை

## படகுச் சேவை வழமை நிலையில்

நெடுந்தீவு அக் 30 இரண்டு நாட்களாகத் தடைப்பட்டிருந்த நெடுந்தீவு — குறிகட்டுவான் படகுச் சேவை நேற்று வழமைக்குத் திரும்பியது.

நெடுந்தீவில்ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டு அமைதிப் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதாலேயே படகுச் சேவை தடைப்பட்டது.(ஓ-111)

## கல்வியங்காட்டில்

யாழ்ப்பாணம் அக் 30 கல்வியங்காட்டில் நேற்று அமைதிப் படையினர் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர்.

பிரஸ்தாப இளைஞர் பஸ்லொன்றில்வைத்து ஆயுதத்துடன் கைதுசெய்யப்பட்டார் என்று. பின்னர் அறிய வந்தது. (இ-10)

## ஆர்ப்பாட்டப் பேரணி!

கொழும்பு. அக். 30 மூன்று மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து வெள்ளவாயாவில் நேற்று முன்தினம் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதையொட்டி அப்பகுதியில் உள்ள அரசு அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டுஇருந்தன.

ஒன்பதுமைல் தூரப் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. (ஓ-எ)

## 'மகாகிருத்திய' நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, அக் 30 இந்திய அமைதிப் படையினரின் நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் 6 போராளிகள் கொல்லப்பட்டனர் என்றும் 11 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் இலங்கை வானொலி நேற்று இரவு அறிவித்தது

இந்திய அமைதிப்படை 'மகா கிருத்திய' என்னும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதை இலங்கை வானொலி தனது செய்தியறிக்கையில் நினைவு படுத்தியது.

அக்கரைப்பற்றில் மூன்று போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [ஓ-எ]

## மகாநாயக்க தேரர்கள் வேண்டுகோள்

கொழும்பு, அக் 30 தெற்கில் அரசியல் சட்சிகள் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வந்து இரத்தம் சிந்துவதை நிறுத்தும் படி வடக்கு— கிழக்கைச் சேர்ந்த 5 மகாநாயக்க தேரர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 'Sisil', 'Usha' குளிர் சாதனப் பெட்டிகள் குறைந்த விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- Uni Services Engineers, Hospital Lane, Manipay. (7493)

வட்டுக்கோட்டையில் தெல்லிப்பழை வீதியும், மூளாய் ரோட் வாசிகசாலை வீதியும் சந்திக்குமிடத்தில் 2½ பரப்புக்காணியும் சிறிய வீடும் விற்பனைக்கு உண்டு. (நல்ல சுற்றுடல்) (கிணறும் உள்ளது) தொடர்பு: K. S முத்துலிங்கம், நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி (C/423)

யாழ் நகரில் கடைகள், வீடுகள், வைத்திய சாலைகள், மருந்தகச் சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், களஞ்சிய சாலைகள் அமைக்கக் கூடிய காணிகள் விற்பனைக்கு உண்டு. இரு கடைகள் நகரின் மத்தியில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.S. முத்துலிங்கம், Royal Land Commission Agency, Regd: 16074 Royal Institute, Navaly. (C/424)

'[illegible]ப்ஸ்' கலர் T V செ[illegible]'' நல்ல நிலையில் 7,500/- ரூபா விலையில் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும் P F. ராசையா, 22, சென். ஆன்ஸ் சேர்ச் ரோட், பாண்டியன் தாழ்வு. (7470)

மானிப்பாய் - யாழ்ப்பாணம் வீதியில் (கூழாவடி ஆனைக்கோட்டை) 5 பரப்புக் காணியுடன் ஒரு மேல்மாடி வீடும், நவீனமயமானது. சகல வசதிகளும் உள்ளது. ஒருவீடும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K S. முத்துலிங்கம் (Royal) சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி, நவாலி (C/422]

யாழ் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் நியாய விலையில் காணி விற்க-வாங்க தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி Royal Land Commission Agency Regd; 16074, Navaly South Manipay சிந்தாமணி பிள்ளையார் கோவிலடி. (Royal Institute) (C 425)

## வீடு விற்பனைக்கு

வல்வெட்டித்துறை 247, கே. கே. எஸ். வீதி ஆலடியில் அமைந்துள்ள ''சரோஜினி பவனம்'' என்னும் 3 1/4 பரப்பு வீடு உடனடி விற்பனைக்குண்டு. மூன்று படுக்கை அறைகள், குசினி, களஞ்சிய அறை, மிகவும் நன்னீர் வசதியும், மற்றும் சகல வசதிகளையும் கொண்டது. தொடர்ப: க. குமரகுரு, 183, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (7471)

## தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146 நவீன சந்தை யாழ்ப்பாணம் (C 357)

## SALE

White Male Pommenarion 7weeks old Wormed and Weaned for Sale 372. Navalar Road, (Near Rasavinthottam) (7639)

## தேவை

வியாபாரக் கடைக்கு ஓர் பெண் உதவியாளர் தேவை. ஓர் அளவு கணக்கியல் தெரிந்தவராக இருக்கவேண்டும். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது 8-11-88 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும் No: 391, C/o உதயன், யாழ்ப்பாணம். (7634)

எமது தயாரிப்புப் பொருட்களை சைக்கிளில் சென்று கடைகளுக்கு வியாபாரம் செய்வதற்கு கமிஷன் அடிப்படையில் ஆட்கள்தேவை. சொந்த சைக்கிள் வைத்திருப்பவர் வயது. அனுபவம் முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 4, C/o உதயன். (7659)

சகல விதமான றேடியோக்கள் திருத்துவதில் மிக அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. வீனஸ் றைக்கோடிங் சென்றர், 266/1, ஸ்ரான்லி வீதி, (சிறீதர் சினிமா அருகாமை) யாழ்ப்பாணம். (7638)

O/L சித்தியடைந்த பெண் லிகிதர் தேவை. ஆண்டுகள் 6, 7 8, 9 தமிழ் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை. நேரில் வரவும். Royal Institute, Navaly, (சிந்தாமணி பிள்ளையார் கோவிலடி.) (C426)

## அவசர தேவை

ஆங்கில அறிவுடைய 20 – 40வயதுக்குட்பட்ட பெண்கள் கனடாவில் வீட்டு உதவியாளராக பணியாற்ற விரும்புவோர் உடனடியாகத் தேவை. விபரம் நேரில் தொடர்பு:- Mrs. P. Danial, Miller House, Mallakam Junction, K.K S. Rd. Mallakam (7626)

## உடன் தேவை

அச்சுவேலி 'ராதா ரெயிலறிங்' பெண்கள் பிரிவுக்கு தையல் வேலையும், கட்டிங் வேலையும் தெரிந்த பெண் தொழிலாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ராதா ரெயிலறிங், பிரதான வீதி, அச்சுவேலி. (C/701)

## பாலர் ஆசிரியர் தேவை

மானிப்பாய் மேற்கில் அமைந்துள்ள திருவள்ளுவர் பாலர் பாடசாலைக்கு ஆசிரியர் தேவை. விண்ணப்பங்களை 5 - 11 - 88 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். தொடர்பு:- தலைவர், திருவள்ளுவர் சனசமூக நிலையம், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய், (7630)

## வகுப்புகள்

A/L 89 கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினா விடை வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. கிளைகள்:- பருத்தித்துறை, வவுனியா. (7220)

## English Teachers Exam Classes

சுன்னாகத்திலும் தெல்லிப்பழையிலும் 5 - 11 88 ஆரம்பிக்கப்படும். கொழும்பிலும் பிரபல கல்லூரிகளிலும் ஆங்கிலம் 30 ஆண்டுகளாக கற்பித்தவர். 30மணி பாடநேரத்தில் பாடத்திட்டம் முடிவடையும். பலன் அடைவது நிச்சயம். தொடர்பு: கணேசன் (இளைப்பாறிய ஆசிரியர்), விங்க் (Vink) ஒழுங்கை, அளவெட்டி வடக்கு. (7623)

## மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

## மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனை

A/40, A/50, M/miner ஆகிய வாகனங்களின் Original உதிரிப்பாகங்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு பார்வையிடலாம். தொடர்பு- திருமதி சிங்கநாயகம், C/o லோறன்ஸ், உடுவில் ரோட், மானிப்பாய். (7629)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள் பேட்டுக் கோழிகள் சேவற் கோழிகள்குஞ்சுகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு:- நல்லூர் பாம்சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர் (6881)

## SPOKEN ENGLISH

புதிய பிரவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக. ஆரம்பம்: 03 - 11 - 88 நேரம் பகல் 10–30, 12-30 செவ்வாய், வியாழன் நாட்களில் மட்டும் S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7439)

## O/L ENGLISH

பழைய பாடத்திட்டத்திற்கமைய ஒருமாதகால (Paper Class) பயிற்சி வகுப்பு ஆரம்பம்: 03-11-88 தொடர்பு S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7438)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டு கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் 'ஷப்ரு சேவை பிரிவு இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். C/691)

## ஜேரொக்ஸ்

தரமான ஜேரொக்ஸ் பிரதிகளை (தமிழ்/ ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் ''ஷப்ரு'' சேவை பிரிவு, இல: 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/692

## மழைப் போர்வைகள் (Rain Coats)

மழைக் கால பாவனைக்குரிய மழைப் போர்வைகள் (Rain Coats) தற்போது எமது தயாரிப்பில் உள்ளன சகல அளவுகளிலும் கிடைக்கும் மேலதிக விவரங்களுக்கு, ராம் சன்ஸ் பிரயாணப் பொருள் கள் தொழிலகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (7614)

## ஜோதிடம்

(05-11- 88) சனிமாற்றம் 3/50. எங்கும் கிடைக்கும். எல்லா இராசிகளும். நூலாசிரியர்: சத்தியதாஸன், (MECH, EIEC, Eng) தமிழர்களின் மேடத்திற்கு சுபீட்சமும், தென்னிலங்கை கும்பராசிக்கு ஆட்சி மாதத்தின் போது இரத்தக் களரியும் ஏற்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7637)

## 'அரிசி மில்' தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை

அச்சுவேலி ஆதவன் அரிசியாலையில் கடமைபுரிய 'மில்' வேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம், மகாவித்தியாலய வீதி, அச்சுவேலி. (C/700)

## வீடு வாடகைக்கு

மேல் மாடியில் நான்கு அறைகளுடன் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு- 114, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். (7494)

## தவறிவிட்டது

வேம்படி சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில் பஸ்ஸில் எனது மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருநெல்வேலிச் சந்தி குறிஞ்சி பார்மஸியிற் சமர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7655)

ஆனந்தினி சேதுராமலிங்கம் செட்டியார் இல 625751039OV, விஜேதினி சேதுராமலிங்கம் இல: 647081215V ஆகிய இருவரினதும் அடையாள அட்டைகள் ஒரே பேர்சில் யாழ்ப்பாணம் Townஇல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் or வெலிங்டன் தியட்டருக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையிலுள்ள பேள் மெட்டல் இன்டஸ்ரீயிலோ ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (7492)

உதயராணி கந்தையா ஆகிய எனது அடையாள அட்டை இல 636381608V 25- 10- 88 அன்று யாழ். Townக்கும், சச்சோக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7653)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா இன சிவப்பு, வெள்ளை ஒருநாள் பேட்டுக் குஞ்சும், புரொயிலர் மற்றும் சேவல் குஞ்சுகளும் 30 - 10 – 88 இல் விநியோகிக்கப்படும். தேவைப்படுவோர் உடன் வரவும். M G M Forage Stores, 208, 1 st Cross St, Jaffna (7635)

## விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டி, ஹோல் செற் Casio. Musical Instrument Fan, காரியாலய மேசை, Cooler, Floor Polisher. கசற்றேடியோ, விருந்தை செற்றி, T:V: Stand மற்றும் பலவித பாவித்த பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு: No 191, பருத்தித்துறை வீதி (நல்லூர் கோயில் முன்பாக) (7661)

St. Anthony thank you very much for the favour granted. E. [illegible] (7462)

# A.A.T. (London) ACCOUNTANCY EXAMS

A. A. T. 3 பகுதிகளை உள்ளடக்கிய பரீட்சை நெறி

A. A. T. சித்தியடைவதன் மூலம் CIMA (ICMA) கணக்காளராக முடியும்

- ✶ இத்துடன் CIMA பகுதி I க்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.
- ✶ விண்ணப்பதாரரின் தகைமை G.C.E சாதாரண தரம்.

A. A. T. (London) June 89 பரீட்சையில் தேறுபவர்கள் அங்கத்தவராவதற்கு London இல் பதிவு செய்யவுள்ள திகதி: 15 - 11 - 1988 மேலதிக விபரங்கட்கும் விண்ணப்பபடிவங்கட்கும்

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane, JAFFNA. (C-702)

# பிரயாண ஒழுங்கு

**லிபியா:**

1. Plumbers (பிளம்பேஸ்)
2. Steel Erectors (கம்பி கட்டுபவர்கள்)
3. Fibre Glass Techncians
4. Pipe Fitters (பைப் பிற்ரேஸ்)
5. Insulation Technicians / Fitters
6. Repair Technician for Genarators/ Welding Mechanics
7. Mechanics for Air Compressors
8. Specialist for Electrical Motor Control System

மேற்படி வேலையாட்கள் உடன் தேவை. சம்பளம் ரூபா 10,000/- வரையில் சகல வசதிகளுடன்.

**குவைற்:**
ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ். நல்ல சம்பளம்.

**லெபனன்:**
தொழிற்சாலை வேலையாட்கள். உடன் பயணம்.

**சவூதி:**
உதவியாளர்கள். நல்ல சர்பளத்துடன். காலை 10 மணிக்கு முன் சந்திக்கவும்.

**சிவா மாஸ்ரர்**
Employment Consultant
ஏழாலை தெற்கு. (7587)

# University of Jaffna, Sri Lanka

## Registration of Supplies and Contractors - 1989

Applications are invited up to 30th November 1988 from reputed Suppliers/ Manufacturers /Local Agents / Contractors who wish to register themselves for the under mentioned Supplies and services.

### Supplies

1. Stationery
2. Books Magazines and other Publications
3. Office Furniture - wood.
4. Office Equipment (Steel Almiraha, Cabinets etc )
5. Office Machines (Tyrewriters, Calculators. Duplicating Machines, Photo copies etcde )
6. All types of Hardware Paints, Varnish.
7. Machinery Tools and Spares.
8. Electrical Equipment and Spare Parts
9. Kitchen Utencils including Cutlery and Crockery
10. Textiles - window curtains, uniform materials etc
11. Laboratory equipment, Chemicals and Glassware.
12. Timber
13. Building Materials (Sand, Bricks, Tiles, Metal Lime etc )
14. Brooms, Ekel Brooms, Door-Mats etc.
15. Tyres, Tubes and Batteries.
16. Motor Spares and Accessories
17. Ayurvedic Drugs
18. Drugs and Medical Supplies.
19. Sports and Welfare Goods
20. Fire Extinguishing Equipment and Safety Equipment
21. Rain coats Gum boots Umbrellas and Shoes etc.
22. Pipes and Pipe Fittings
23. Plastic and Fibre Glass Products.
24. Ceramics, Glassware, Glass.
25. Fertilizer, Chemicals and Tools for gardening.
26. Electronic Components.

### Services

1. Printing, Block Making, Rubber Stamps & Date Stamp.
2. Repairs to Office Machines and Equipments (Typewriters, Calculators etc )
3. Repairs and Maintenance of Refrigerators, Air Conditioners.
4. Repairs to Steel Furniture.
5. Repairs to wooden furniture.
6. Rattaning of chairs.
7. Tailoring of garments and Door and window curtains.
8. Drawing of Name-boards and making of plastic Name-boards.
9. Laundering
10. Binding of Books and periodicals.
11. Clearing of Cargo.
12. Transport services within Jaffna and Colombo - Jaffna.

### Engineering Services

1. Repairs to Motor Vehicles.
2. Repairs to Electric motors and Electric equipment.
3. Civil Engineering Works including the construction and repairs to building and road.
4. Electrical wiring installation.

5. Installation and Repairs to water supply and sanitary
6. Fabrication and Installation of Iron Grills and gate.
7. Consultancy for Building Services / buildings
8. Supply and fixing of fixed timber furniture

All applications should be submitted under registered cover marked " Supplies/ Services – 1989" on the left hand corner of the envelope as follows:

1. Application for Supplies and Services should be addressed to BURSAR, University of Jaffna, Thirunelvely.
2. Application for Engineering Services addressed to WORKS ENGINEER, University of Jaffna, Thirunelvely.

Separate application should be sent for each Supply / Service. Each application should accompany a Postal Order to the value of Rs 100.00 drawn in favour of "UNIVERSITY OF JAFFNA" as registration fees.

Quotations will be called only from the registered suppliers However the University reserves the right to call for quotations from other sources as well in order to obtain quality goods at competitive prices.

Any Supplier who fails to submit quotations when called for or fail to supply items / services in time or in uniformity with the stipulated specification will be struck off from the register with out prior notice

Every application should include the following information:-

- I. Supply or Service applied for:
- II. Name and Address;
- III. Telephone Number;
- IV. Number and Date of the Business; Registration;
- V. Nature of Business;
- VI. Names of Bankers;
- VII. Credit facilities availble;

Additional information required for Engineering Services.

- VIII. Amount up to which registration is requested (item 3 only) (Submit copies of registration with other Government Department / Corporation / Board & also state whether you wish to quote for jobs below Rs. 50,000/-)
- IX. Give names and experience of all Engineers and Architects permanently employed at your organisation (item 3 & 7 only)
- X. Indicate the last three related jobs handled by you (preferably with Government/Corporation / Board) with total cost of the job done by you and date of completion (For items 3, 4, 5, 7 and 8 only)

REGISTRAR,
University of Jaffna.

(C/685)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனித உரிமையை ஆதரிக்கும் நாடுகளிலேயே அது மீறப்படுகிறது

## சர்வதேச மன்னிப்புச்சபை விவரமான அறிக்கை

யாழ்ப்பாணம், அக் 30 மனித உரிமைகளுக்கான சர்வதேச சாசனத்தை ஆதரித்து வரும் நாடுகளிலேயே மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபை இந்த ஆண்டு (1988) வெளியிட்டிருக்கும் அதன் சர்வதேச அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, நாசகார சக்திகள் என்ற பெயரை முத்திரையிட்டு, சித்திரவதைகளைப் புரிந்தும், கொலைகளைச் செய்தும், சிறைத் தண்டனைகளை வழங்கியும் இந்த நாடுகள் மனித உரிமைகளுக்கான சர்வதேச சாசனத்தை மீறுகின்றன.

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1987 ஆம் ஆண்டில் சர்வதேச மனித உரிமை சம்பந்தமான நிலவரங்களை 278 பக்கங்களைக் கொண்ட ஓர் அறிக்கையாக சர்வதேச மன்னிப்புச் சபை தயாரித்து வெளியிட்டிருக்கிறது.

பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய விடயங்கள் வருமாறு:

★ ஆண்கள், பெண்கள் மாத்திரமல்லாது குழந்தைகள் கூட அரசாங்க அதிகாரிகளினால் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

★ அநேக நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்கள் தங்கள் நோக்கங்களை அடையும் பொருட்டு தமது சொந்த மக்களையே கடத்தியும், கொலை செய்தும் வருகின்றன.

ஒரு சில குறிப்பிட்ட குற்றச் செயல்களைப் புரிபவர்களுக்கு மட்டுமே மரணதண்டனை வழங்கப்படும் என்று 120க்கும் மேற்பட்ட நாடுகள் தமது சொந்த சட்டத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஷரத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு வருடமும் மறைமுகக் கொலைகளை இந்த அரசாங்கங்கள் செய்து வருகின்றன.

★ அரசாங்கங்களுடன் தொடர்புடைய குழுக்களினால் ஆயிரக்கணக்கான மக்களின் மனித உரிமைகளை மீறும் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் மொத்தம் 135 நாடுகளில் இடம்பெற்றுள்ள பல்வேறு விதமான மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

கைது செய்யப்பட்டிருப்போர் பற்றிய விவரங்களும், சித்திரவதை, கொடூர நடத்தல் ஆகியவை தொடர்பாக தொண்ணூறு நாடுகளின் விவரங்களும் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(உ-ஐ)

### தென்னிந்திய திருச்சபை நூற்றாண்டுவிழா

ஏழாலை தெற்கு தென்னிந்திய திருச்சபை ஆலயத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நவம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

யாழ் அத்தியட்சகர் பேராயர் அதிவண டி. ஜே. அம்பலவாணர் தலைமையில் முழுநாள் வைபவமாக இது நடைபெறும்.

இந் நிகழ்ச்சிகளில் குடாநாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ குருமார்களும் பிரபல்யமான சைவப் பெரியார்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

நூற்றாண்டு மலர் வெளியிடுதல், பகிரங்கக் கூட்டம், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெறும்.

இதற்கான முயற்சிகளை ஏழாலை திருச்சபை பங்குக்குரு வண எம் தேவதாசன் மேற்கொண்டுள்ளார்.

# மாணவரை மாட்டுப் பட்டி போல் அடைத்து வைக்கிறோம்

## கல்லூரி நிலை குறித்து அதிபர் கவலை

யாழ்ப்பாணம், அக் 30 ''எமது பாடசாலை நூறு ஆண்டுகளுக்கு முன்பதாகத் தாபிக்கப்பட்டது ஆனால் இன்றும் அது அந்தக்காலத்து நிலையிலேயே இருக்கிறது இரண்டே கால் பரப்புக் காணிக்குள் மூவாயிரம் சதுர அடிகூட இல்லாத பழங்காலத்துக் கட்டடத்துக்குள் ஐநூற்றுக்கும் அதிகமான மாணவர்களை மாட்டுப்பட்டி போல் அடைத்து வைத்துக் கற்பிக்கவேண்டிய துர்ப்பாக்கியநிலை இருக்கிறது தளபாடம் இல்லாமல் பிள்ளைகள் நிலத்தில் இருக்கிறார்கள் ஓடியாடி விளையாடவோ மூச்சுவிடவோ ஒரு முற்றந்தானும் இல்லை

தாவடி தமிழ்க்கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்கையில் பாடசாலை அதிபர் திரு. அ. வை. நாகராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:-

எமது பாடசாலையை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்தையோ அதன் அதிகாரிகளையோ நம்பி இருப்பதில் பிரயோசனம் இல்லை.

நம்மை நாமே நம்பிக் காரியத்தில் இறங்க வேண்டும்

பெற்றோர்களும் பழைய மாணவர்களும் முன்வந்து இப்பாடசாலையின் தேவைக்கு உதவவேண்டும்.

பிள்ளைகளின் நன்மைக்காக பெற்றோர்களும் சகோதர சமுதாயத்துக்காக பழைய மாணவர்களும் உதவ முன்வர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பழைய மாணவர்சங்கத்தின் யாப்பு ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. (இ-ச)

### றெட்பாணு உதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள றெட்பாணு நிறுவனத்தினர் மேலும் பத்தாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்க உள்ளனர்.

ஏற்கனவே ஆறுபாடசாலைகளுக்கு றெட்பாணு நிறுவனத்தினர் மேசை, கதிரை போன்றவற்றை வழங்கி இருந்தனர்.

### கைதிகளுக்கு ஆதரவாக

# ஒட்டுசுட்டானில்

## அடையாள உண்ணாவிரதம்

ஒட்டுசுட்டான், அக். 30 சிறையில் வாடும்கைதிகளுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக கடந்த புதன்கிழமை ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்னையர் முன்னணியினர், பிரஜைகள்குழுக்கள் கூட்டாக இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தன.

முத்தஐயன்கட்டு, சம்மளங்குளம், கருவேலன் கண்டல், கற்சிலைமடு பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் பாடசாலை மாணவ மாணவிகள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

இறுதியில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

(ஒ 113)

### வடக்கு - கிழக்கில்

# நிஸ்கோ சுயதொழில் வாய்ப்பு

யாழ்ப்பாணம், அக். 30 யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிஸ்கோ இளைஞர் கூட்டுறவு அமைப்பின் சுய தொழில் வாய்ப்பு நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

பிரதேச இளைஞர் யுவதிகளது முன்னேற்றத்தையும், புனர்வாழ்வையும் கருத்தில் கொண்டு சுயதொழில் வாய்ப்புக்களுக்காக கடன் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பிரதேச மூலவளங்களைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தக் கூடிய சுயதொழில்களுக்கு 15 ஆயிரம் ரூபா தொடக்கம் 30 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும்.

இதன்கீழ் விவசாயம், மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, நெற்செய்கை, உபஉணவுப் பயிர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், மரகறிச்செய்கை, கால்நடை பண்ணை வளர்ப்பு மிருக பரிபாலனம் பனம்பொருள் உற்பத்தி குடிசைக் கைத்தொழில் ஏனைய சிறிய அளவிலான கைத்தொழில் முயற்சிகள் வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனப் பெட்டி சைக்கிள் திருத்துதல் போன்ற சுயதொழில் வாய்ப்புகளுக்கு கடன் திட்டம் அமுலாக்கப்படும்.

தேவையான மேலதிக விவரங்களை அந்தந்த மாவட்ட நிஸ்கோ இளைஞர் கூட்டுறவுப் பொது முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(ச)

# சேவையிலிருந்து பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டதாரி சம்பளம் வழங்கக் கோரிக்கை

அம்பாறை, அக். 30 சேவையிலிருந்து பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டம் பெற்ற ஆண்டிலிருந்து பட்டதாரி ஆசிரிய நியமனமும் சம்பளமும் வழங்க ஆவன செய்யவேண்டும்

கல்முனை பட்டதாரி நியமனம் பெறாத ஆசிரியர் சங்கம் பிரதமர் திரு ஆர் பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆசிரிய சேவையிலுள்ள சிலர் தமது தகைமைகளை உயர்த்திக் கொள்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுகின்றனர்.

அவர்களுக்கு சம்பளத்துடனான படிப்பு லீவு, சம்பளம் அற்ற படிப்பு லீவு, வெளிவாரிப்பட்டத்துக்கான படிப்பு வசதிகள் என்பன கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்றன

இவ்வாறு 1984, 1985 1986 ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்று தற்போது சேவையிலுள்ளவர்களுக்கு (1983 ஆம் ஆண்டின் பின்னர்) பட்டதாரி நியமனமோ, சம்பளமோ இதுவரை வழங்கப்படவில்லை.

இது விடயமாக அதிகாரிகள் மட்டத்திலும் கல்வி அமைச்சு மட்டத்திலும் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள்கள் எதுவும் இதுவரை கவனிக்கப்படவில்லை.

ஆனால் புதிதாக ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு உடனடியாகவே பட்டதாரி நியமனமும், சம்பளமும் வழங்கப்படுகின்றன.

இதன்படி சேவையிலுள்ள ஆசிரியர்களை விட அதிகளவு சம்பளத்தையும் உயர் பதவிகளையும், ஏனைய சலுகைகளையும் அவர்களிடம் கற்ற மாணவர் பெறுகின்றனர்.

இந்நிலையானது இலங்கையின் தார்மீக சமுதாயத்தில் உள்ள வேறுபாட்டை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இப்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-14)

# சமுதாயத்துக்குச் செய்யக் கூடிய ஒரே தொண்டு

## கல்விச் செல்வத்தை தேடுவதே

கொடிகாமம், அக் 30 அன்ன சத்திரம் ஆயிரம் ஆலயம் பதினாயிரம் கட்டுவதிலும் பார்க்க ஏழை எளியவர்களுக்கு கல்விச் செல்வத்தை தேடித்தருவது நாம் சமுதாயத்திற்குச் செய்யக் கூடிய ஒரே தொண்டாகும்

சாவகச்சேரி ''ஸ்ராண்ட் போட்'' கல்வி நிலையக்கலை வாணிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சாவகச்சேரி நீதிவான் செந்தமிழ்ப் புலவர் திரு. மு. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறுகின்றார்.

கல்வி நிலைய அதிபர் திரு. நாகேஸ்வரன் தலைமை வகித்தார்.

திரு மு திருநாவுக்கரசு மேலும் பேசும்போது ''இப்போதைய நிலையில் பாடசாலையில் பெற முடியாத மாணவனது கவனத்தையும், கல்வியார்வத்தையும் ஒருங்கே ஊக்குவிக்கும் [illegible] பாராட்டுக்குரியது'' என்றார். (க-75)

# போதைப்பொருள் பாவனை: அதன் தாக்கங்கள் என்ன?

வைத்திய கலாநிதி வே யோகநாதன் யாழ் லயன்ஸ் கழகம் சார்பாக இதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

1 போதைப்பொருள் என்றால் என்ன?

ஒரு மனிதனின் மனநிலையை மாற்றி மகிழ்வு நிரம்பிய மனநிறைவுள்ள நிலையைக் கொடுக்கக்கூடியதும் மனிதனின் தனித்தன்மையை அழிக்கக் கூடியதும் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதுமான இயற்கையாகப் பெறப்படுகின்ற அல்லது செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்ற இரசாயனப் பொருளே போதைப் பொருள் எனப்படும்

2 போதைப்பொருள்களால் மனித குலத்திற்கு ஏற்படும் நன்மைகள் என்ன?

ஒன்றுமில்லை.

3. அப்படியானால் தீமைகள் உண்டா?

ஆம் நிறைய உண்டு போதைப் பொருள் பாவிக்கும் பழக்கம் மனித உயிருக்கே உலை வைக்கின்றது சமூக விரோதச் செயல்களாகிய கொலை, கொள்ளை களவு, கற்பழிப்பு, பாலியல் துர்நடத்தை முதலியவற்றுக்குக் காரணமாகின்றது மனித குலத்தை வேரறுத்து விடுகின்றது மனித குலத்தின் அடித்தளத்தை தகர்த்து விடுகின்றது மனித வாழ்க்கைக்கு ஒரு சவாலாய் அமைகின்றது.

4 போதைப்பொருள்கள் எப்போது யாரால் இலங்கை மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன?

முற்காலத்தில் சிறிய அளவில் பாவிக்கப்பட்டு வந்த போதிலும் 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உல்லாசப் பிரயாணிகளின் வருகையினாலும், சர்வதேசப் போதைப் பயங்கரவாதத்தினாலும் பெருமளவில் அறிமுகப்படுத்தப்பட்டது

5 யார் போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகின்றார்கள்?

13-30 வயதுடைய இளைஞர்கள், யுவதிகள் போதைப் பொருள்களைப் பாவிக்கத் தொடங்கிப் பின் அவற்றுக்கு நிரந்தர அடிமைகளாகின்றார்கள்.

6. எவ்வாறு போதைப் பொருள்களுக்கு அடிமையாகின்றார்கள்?

★ பரீட்சார்த்த ரீதியில் ஆரம்பித்துப் பின்னர் நிரந்தர அடிமைகளாகின்றார்கள்.

★ போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையான நண்பர்கள் மூலம் வேறுசிலர் அடிமைகளாகின்றார்கள்.

★ போதைப்பொருள்களை விற்பனை செய்பவர்களால் அடிமைகளாக்கப்படுகின்றார்கள்

★ விரக்தி நிலையிலிருந்து விடுபடுவதற்காகப் பாவித்துப் பின்பு அப்பழக்கத்தைவிட முடியாமல் அடிமைகளாகின்றார்கள்.

★ சிலர் நோய்களுக்கு மருந்தாகப் பாவிக்கத் தொடங்கி பின்பு அடிமைகளாகி விடுகின்றார்கள்.

★ செயற்கை மனோநிலையை அடையும்நோக்கத்துடன் ஆரம்பத்தில் தொடங்கி பின்பு அடிமைகளாகி விடுகின்றார்கள்

★ போதைப்பொருள் கடத்தல் வியாபாரம் செய்பவர்களில் சிலர் இந்தப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு விடுகின்றார்கள்.

7. எல்லோரும் இந்தப் பழக்கத்திற்கு அடிமைப்படுகின்றார்களா?

இல்லை ஆனால் சமூக சூழ்நிலை சிலரை ஈர்க்கக் கூடும். பிரதானமாக பெற்றோரின் அன்பும், ஆதரவும் இல்லாத பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழும் இளைஞர்கள் வெகு விரைவில் ஈர்க்கப்படுகின்றார்கள். மதுபானம் அருந்தும், புகை பிடிக்கும் பழக்கம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் போதைப்பொருள் பழக்கத்திற்கு கூடுதலாக அடிமைப்படுகின்றார்கள்

மனோதத்துவ ரீதியில் ஒரு சில குறைபாடுள்ளவர்களே மிகவும் விரைவாக ஈர்க்கப்படுகின்றார்கள்.

8. பொதுவாகப் பாவிக்கப்படும் போதைப் பொருட்கள் யாவை?

நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ. Narcoties, Hypnotics Sedatives

உதாரணம்: Opiates அதாவது அபின் வகைப் போதைப் பொருட்கள்.

1. கச்சா அபின்,
2. மோஃபின் (Morphine)
3. கொடீன்(Codeine)
4. பெதடீன் (Pethidine)
5. ஹீரோயின்(Heroin)
6. மெதடோன் (Methadone)

ஆ. Stimulants ஊக்கமளிப்பன அல்லது உற்சாகமளிப்பன.

1. அம்பெற்றமீன் (Amphetamine)
2. கொக்கெயின் (Cocain)
3. புகையிலை (Tobacco)

இ Depressants சோர்வு அல்லது மன இறக்கம் கொடுப்பன.

(i) Barbiturates - (பாபிற்றுறேற்று)

1. Phenobarbitone

(ii) Tranquillizers மனத்தை சாந்தமடையச் செய்பவை

1. Librium
2. Valium
3. Meprobamate

(iii) Alcohols மதுபான வகைகள்.

ஈ. Hallucinogens மனப்பிரமை உண்டாக்கும் மருந்து வகைகள்

1. எல்.எஸ்.டீ L.S.D
2. கஞ்சா செடியிலிருந்து பெறப்படும்போதை மருந்துகள் Cannabis; Hashish, Marauana.

9 போதைப் பொருள்களை எப்படிப் பாவிப்பார்கள்?

பொதுவாக வாய் மூலம் உட்கொள்ளுதல், ஊசிமூலம்செலுத்துதல், புகைத்தல், நுகர்தல். இந்த முறைகள் மருந்துக்கு மருந்து வித்தியாசப்படலாம்

10 போதைப்பொருட்களின் பயங்கர விளைவுகள் என்ன?

(1) அபின் மோஃபின் போன்ற போதைப் பொருள்களைப் பாவிப்பவர்களுடைய இரத்த அழுத்தம் குறைவதால் சிலர் நிற்க முடியாமல் கீழே விழுந்து விடுவார்கள். இவர்களின் கண்மணி சிறிதாகி விடுகின்றது போதைப் பொருள்களை நீண்ட காலம் பாவிப்பவர்களுக்கு உடல் வலி, தூக்கமின்மை, குமட்டல், வயிற்றுவலி, மலச்சிக்கல் என்பன காணப்படும்.

(2) ஹீரோயின் (Brown Sugar) பாவிப்பவர்கள் ஹிப்பிகளைப் போல் தோற்றமளிப்பார்கள். இவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி, கைகால் நடுக்கம், உடற்சோர்வு என்பன ஏற்படும்.

(3) கொக்கெயின் (White Sugar) பாவிப்பவர்களுக்கு பூச்சி ஊர்வது போன்ற விசித்திர உணர்வு ஏற்படும் (Cocaine bugs).

(4) அம்பெற்றமீன் (Amphetamine) மன ஆற்றல் அதிகரிப்பதுடன் உடல் செயற்பாடுகளும் அதிகரிக்கும். இம்மருந்தை மாணவர்களும் சாரதிகளும் பெருமளவில் பாவிக்கின்றார்கள். அதிக அளவில் பயன்படுத்தும் போது உடலில் தளர்ச்சி ஏற்பட்டு, செயலிழந்து கீழே விழுந்து விடவும் கூடும். இவர்கள் மனநோயாளரைப் போன்று காணப்படுவார்கள்.

1. பாபிற்றுறேற்றுகள் (Barbiturates)

(6 ஆம் பக்கம் பார்க்க)


பிரயாண ஒழுங்குகள்

GOLDEN TRAVELS & TOURS

கப்பலில் வேலை வாய்ப்பு:
சம்பளம்: 500 U.S. Dollar
ஒப்பந்தம்: 1 வருடம்.
(இக்கப்பல் கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இலண்டன் ஆகிய நாடுகளில் தரித்துச் செல்லும்.)

சவூதி அரேபியா-S.O.M.C.
University Cleaners 350+100
Hospital Cleaners 350+100
ஒப்பந்தம்: 3 வருடம்.

குவைத்:
ஆஸ்பத்திரி கிளினேர்ஸ்: 35 டினூர்
வீதிச் சுத்திகரிப்பாளர்.
(வயது 18க்கு மேல்)

தொடர்பு:
கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.
குப்பிளான் வல்வெட்டி
(C 688)



உஷா
பெருமிதமாக அறிமுகம் செய்யும் மலிதமான சீலிங் மின்விசிறிகள்



உஷா ஸ்டாண்டர்ட்
விலை: ரூபா 1500 முதல் 1575/-
● 36'', 42'', 48'', 56'' அளவுகளில்
உஷா அலங்கார விசிறிகள்
விலை ரூ 1750/- முதல் 1975/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Co-operative Hospital — Moolai

REHABILITATION HOME

Applications are invited from elders and patients necessitating psychiatric after-care for admission to the rehabilitation home which is due to commence in January 1989.

Those interested please call over at the Hospital Office for application forms and details on Tuesdays, Thursday and Sunday 9.00 to 11.00 a.m. (1-11-88 to 30-11-88).

PRESIDENT,

(C 674)

## வீட்டுத்தோட்டப் போட்டி ஊக்குவிப்பு நடவடிக்கை

மானிப்பாய், அக் 30

யாழ்ப்பாண மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தினால் நடத்தப்படவிருக்கும் 1988 - 89 ஆம் ஆண்டுக்கான வீட்டுத் தோட்டப்போட்டியில் போட்டியாளர்களை கலந்து கொள்ளச் செய்வதற்கான ஊக்குவிப்பு செயற்பாட்டுத் திட்டங்களை உடுவில் கமநல சேவை நிலைய அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

வீட்டுத் தோட்டப் போட்டிகள் பற்றிய விளக்கங்களை அதிகாரிகள் பாடசாலைகள், மற்றும் சனசமூக நிலையங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களில் கூட்டங்களைக் கூட்டி மக்களுக்கு அறிவித்து வருகின்றனர்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புகின்றவர்களுக்கு வேண்டிய விண்ணப்பப்படிவங்களையும் இவர்கள் வழங்கி வருகின்றனர்.

நவம்பர் மாதம் 30 ஆம் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி நாளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது

இப்போட்டிகளில் பங்குபற்றி கவர்ச்சிகரமான வீட்டுத் தோட்டங்களை அமைத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளை பெற்றுக் கொள்ளுமாறு உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பிரிவு மக்களை, உடுவில் பகுதி கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க. மகாதேவராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

வீட்டுத் தோட்டப் போட்டி சம்பந்தமான பூரண விளக்கங்களைப் பெற தத்தம் பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களை நாடுமாறும் அவர் மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-90)


### ஊழியர் இணைப்புக்குழு

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் மலாயன் ஒவ்வூதியம் பெறுவோர் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. இராஜசிங்கம் உப தலைவர்: திரு. எஸ். நாகசுந்தரம், திரு. கே. ஞானசேகரம் செயலாளர்: திரு. கே. எம் குமாரசாமி உப செயலாளர்: திரு. எம். கே. ஐயாத்துறை பொருளாளர்: திரு. ஏ. சி குலியேல் இணைப்பாளர்: திரு ஏ. எஸ். மூர்த்தி (சம்பந்தன்) (ச)

## ஆறும் மாத நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



கனகரத்தினம் ஜெகதீஸ்வரன்

(பரியோவான் கல்லூரி மாணவன்)

★ ★ ★

அன்பின் ஜெகன்!

விண்ணில் ஒளியாய் நிலைத்தாயே - இந்த
மண்ணில் கலந்தே மறைந்தாயோ
எண்ணத்துக் கென்னடா இளம்கன்றே — உன்னை
எண்ணி எண்ணியே ஏங்குகிறோம்
''மெமறி'' விளையாடி எம்மை வென்றுவந்தாய் —இன்று
எம்வாழ்வில் மெமறியாய் ஆகிவிட்டாய்.
எம்மைச் சுற்றிச் சுற்றியே நின்றிருந்தாய் — இப்போ
எம் எண்ணங்கள் உனைத்தேடிச் சுற்றுதையா
அன்புள்ளம் கொண்ட ஆத்மாக்களை — அந்த
ஆண்டவன் இங்கலைய விடுவதில்லை
ஜெகதீஸ்வரன் என்ற நம் அன்புப்புறவே உனை
அந்த ஈஸ்வரன் தன்னிடம் அழைத்தானோ?
உன் அன்புக்கு அடிமையாய் ஆகிவிட்டோம் — அதனால்
ஆறுதல் இன்றியே தவிக்கின்றோம்
எம் நெஞ்சில் நிலையாய் நிலைத்து விட்ட — உன்
நினைவுகள் எம்மைவிட்டுப் போகாதையா.

அன்புடன்

பெற்றோர், சசி அக்கா, விஜி அக்கா, தம்பி பாலன், ஸ்ரீ மச்சான், ஆனந்தி மச்சான்.

2 11-1988 (புதன்கிழமை) நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

கனகரத்தினம் தம்பதிகள்,
(அரச மரக் கூட்டுத்தாபனம்)
441, கண்டி வீதி.
அரியாலை, யாழ்ப்பாணம்.

(7293)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
9 - 12 - 1955

● ● ●

அழிப்பு
29 - 9 - 1988



அமரர் கந்தையா - இராஜரட்ணம்

காலத்தால் அழிக்க முடியாத - உந்தன்
கம்பீரத் தன்மையை தக்க
காரணங்கள் காட்டாமல் - கொடிய
காலன் உன்னை அழித்தானே!
மரணங்கள் மலிந்து போன - இந்த
மண்ணில் ராஜாவையும் சேர்த்தானே!
மாதம் ஒன்றாயினும் ஆண்டுதான்
பலவாயினும் - எம்
மனத்தை விட்டகலா மாதவப் புதல்வனே
கண்ணீரையே உன் பாதத்திற்கு
மாலையாக்கி காணிக்கை செலுத்துகின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயறுரும்:
தாய், சகோதரன், சகோதரிகள்,
ஒன்றுவிட்ட சகோதரர்கள், மருமக்கள்,
அண்ணி, மச்சான்மார், மைத்துனிமார்
பெருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (7496)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

★ ★



★ ★

திருமதி ஏரம்பு பரமேஸ்வரி

தோற்றம்: 15.03.1927 மறைவு: 11.11.1987

திதி:- 30.10.1988

இறைபதத் திருந்திட்டாலும்
எங்களை மறந்திடாமல்
நிறைமகளாக வந்தே
நிலமிசை வாழ்வா யம்மா
குறைவெதும் இன்றி எம்மை
கூர்பெற வைத்த தாயே
நெறியுளாய் நீங்க ளின்றி
நிழலெதும் இல்லை யம்மா

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்.

7, வேலப்பர் லேன்,
அரியாலை. (7500)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னுகம்.

# கேள்வி அறிவித்தல் - 1989

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியனவற்றை 1989 ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 1989 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதிவரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட தனித்தனி கேள்விகள் 14 - 11 - 88 ஆந் திகதி நண்பகல் 12 00 மணிவரை வலிகாமம் தெற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 11 - 11 - 88 ஆந் திகதி நண்பகல் 12 00 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப் படும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 14 - 11 - 88 ஆந் திகதி நண்பகல் 12 . 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக மூலப் பிரதியை குறிப்பிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விசேட ஆணையாளர், வலி - தெற்கு பிரதேசசபை, சுன்னுகம் என விலாசமிட்டுப் போடுதல் வேண்டும். இணைப்பிரதியை பிராந்திய 'உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை, யாழ்ப்பாணம்' என விலாசமிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் என்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதியிலும், நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

கேள்விகள் யாவும் 16 - 11 - 88 ஆந் திகதி காலை 10 . 00 மணிக்குத் திறக்கப்படும். இச்சமயத்தில் கேள்விக்காரர்கள் அனைவரும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்வியையோ அல்லது அதன் பகுதியையோ ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைய குத்தகை எடுத்து நடாத்துதல் வேண்டும் நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எவ்வித நட்ட ஈடுமின்றி குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. மேலும் 1988 ஆம் ஆண்டுக் கேள்வி நிபந்தனைகளை மீறியவர்கள் இம்முறை கேள்விகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர். சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவர்களிடமிருந்து பெற்ற அனுமதிக் கடிதங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் அறிய விரும்பின் வலிகாமம் தெற்கு பிரதேச சபை அலுவலகத்தில் சாதாரண வேலைநாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி-தெற்கு பிரதேச சபை, அலுவலகம்,
சுன்னுகம். 25 - 10 - 1988.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

### வலி — தெற்கு பிரதேச சபை, சுன்னுகம் உப அலுவலகம்,

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிகமாக செலுத்த வேண்டிய மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| இல. | | | | |
| சுன்னுகம் மத்திய சந்தை | 100/- | — | 1000/- | 550, 000 |
| மீ. 1 மாட்டிறைச்சிக் கடை (சந்தை) | 50/- | 100/- | 1000/- | 100, 000 |
| மீ. 2 ஆட்டிறைச்சிக் கடை (சந்தை) | 50/- | 100/- | 100/- | 55, 000 |
| மீ. 4- கருவாட்டுக் கடை (சந்தை) | 15/- | 60/ | 100/- | 1700/- |
| உமல், கடதாசி ஆகியன விற்பனை செய்யும் உரிமை | 15/- | — | 500/- | 8000/- |
| **வலி - தெற்கு பிரதேச சபை, உடுவில் உப அலுவலகம்** | | | | |
| மருதனார்மடம் சந்தை | 50/- | — | 1000/- | 50, 000/- |
| இணுவில் சந்தை | 50/- | — | 1000/- | 5000/- |
| இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 25/- | — | 100/- | 5000/- |
| தாவடி ஆட்டிறைச்சிக் கடை | 25/- | — | 100/- | 7000/- |
| தாவடி மாட்டிறைச்சிக் கடை | 25/- | — | 100/- | 8000/- |
| உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 25/- | — | 100/- | 8000/- |
| தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 25/- | — | 100/- | 7000/- |
| **இணுவில் சந்தை வெளிக்கடைகள்** | | | | |
| இல. 1, 2 | 25/- | — | 100/- | 600/- |
| இல. 3 | 25/- | — | 100/- | 550/- |
| இல. 4 | 25/- | — | 100/- | 1500/- |
| இல. 5, 6 | 25/- | — | 100/- | 1100/- |
| இல. 7 | 25/- | — | 100/- | 300/- |
| இல. 8 | 25/- | — | 100/- | 300/- |
| இல. 9, 10 | 25/- | — | 100/- | 550/- |
| இல 11 | 25/- | — | 100/- | 350/- |
| இல. 12, 13 | 25/- | — | 100/- | 900/- |
| **வலி - தெற்கு பிரதேச சபை, ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| ஏழாலை தெற்கு சந்தை | 25/- | — | 50/- | 150/- |
| குப்பிளான் சந்தை | 25/- | — | 100/- | 1000/- |

(C-687)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
31-08-1916

விண்ணில்:
12-11-1987

திதி:
30-10-1988

பண்டத்தரிப்பு

திரு. வயிரமுத்து செல்லத்துரை

(ஓய்வு பெற்ற காரியாலயமேற்பார்வையாளர் O. A. கச்சேரி)

எங்கள் எல்லோருக்கும் வளமான வாழ்வளித்த தெய்வமே, எமக்கு நல்வழி காட்டி அன்பு அறநெறி, பண்பு பாசத்துடன் வாழ்ந்த தெய்வமே, எம்மை விட்டுப் பிரிந்து, ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அகல் விளக்காய் அணையாத் தீபமாய என்றும் ஒளிர்கிறது,

உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய இடைவிடாது பிரார்த்திக்கின்றோம்,

என்றும் உங்களை நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

''திருப்பதி''
பொற்தி வீதி,
பண்டத்தரிப்பு. (7572)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நாகமுத்து கதிர்காமநாதன்

மலர்வு 26.04.1952 உதிர்வு 17.10.1987

மல்லாகம் மண்ணதனில்
உதித்த
கதி(ர்)ரவனே
உன் நாவன்மை
நாடறியும்
உன் நல்ல குணம்
பா(ர்)ரறியும்
வீட்டு மனைவிக்கு
நல்ல கணவன் - நீ
நாட்டு மக்களுக்கு
உத்தம சேவகன் - நீ
இன்று -
மரணத்திலும் ஜனனித்து
எம்முடன்
வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்.

உன் துயரால் வாடும்:
மல்லாகம் வாழ் மக்கள்,
நண்பர்கள்.

(7498)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகின்றது!

வெளிவாரி

**G.A.Q., B.A., B.Com.,**

மாணவர்க்கான இரு

**பொருளியல் நூல்கள்**

1. இலங்கையின் பொருளாதார வரலாறு.
2. இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு.

பாடத்திட்டத்திற்கமைய

வினாக்களுக்கு விடையளிக்கத்தக்க

முறையில் அனுபவம்வாய்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளரால் தொகுக்கப்பட்டுள்ளது

கிடைக்குமிடங்கள்:-

1. பட்டப் படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
2. 37, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில். (7453)



## 31ஆம்- நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திரு. சின்னத்தம்பி சின்னராசா**

(ஸ்ரீதரன் விளையாட்டுக் கழக உரிமையாளர்)

மலர்வு: 17. 07. 1934 — உதிர்வு: 30. 09. 1988

எமது அன்புந் தெய்வமே
குடும்பத்திற்கும் உற்றார்
சுற்றத்தாருக்கும் ஒளிவிளக்காய்
வழிகாட்டி வந்த நீங்கள்
இடை நடுவில் கண்ணீர்க்கடலில்
எமை எல்லாம் ஆழ்த்தி விட்டு
இறைவனோடு இறைவனாய்
இணைந்து சென்றதேனய்யா?
என்றென்றும் உம் நிழலிலே
எம்வழியாய் கொண்டுவாழும்.

இன்று 30-10-88-ல் நடைபெறும் அந்தியேட்டி கிரியையில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

அரசடிவீதி,
நல்லூர். (7450)



## G. A. Q. — B. A.

(89, 90 April) (90 April)

புதிய பிரிவுக்கான விரிவுரைகள்
ஆரம்பமாகின்றன

ஆரம்பம்:- 05. 11. 88 பி. ப 3 மணி

விரிவுரையாளர்கள் :-

மெய்யியல்: திரு. சந்திரராஜா, B A.Hons.
தமிழ்: திரு. நாகேஸ்வரன், M. A
இந்துநாகரிகம்: திரு. M. ராஜரட்ணம், -M A.

விபரங்கட்கு:-

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
C/o சுகிர்த வாசா
கும்பளாவளை வீதி — அளவெட்டி

மு.கு:- A/L 90 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (7576)



## சாவகச்சேரியில்

Computer Programming and Data Processing in

BASIC LANGUAGE

காலம்: 3 மாதம் Fees: 1250/-

தகைமை - G C. E (O/L)

ஆரம்பம்:- 03 - 11 - 88 9.30 a.m

ABLE TECHNICAL STUDIES

SCIENCE CENTRE

Post Office Road,
CHAVAKACHCHERI. (7562)


# கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாளக்கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், அக். 30

கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாளக் கார்ட்டுகள் பொது மக்களால் 292/2, நாவலர் வீதியிலுள்ள உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

23535097 V அன்னம்மா அந்தோனிப்பிள்ளை, வேலணை.

357720079 V செல்லம்மா, கொக்குவில்.

426040158 V தவமணி மாணிக்கன், வசாவிளான்.

715090244 V பிரான்சிஸ் சேவியர் பிறீடா நிஷாந்தினி, குருநகர்.

397970116 V அரியமலர் முருகேசு, வலிகாமம் தென்மேற்கு.

286550819 V அன்னம்மா செல்லையா, காரைநகர்.

525800407 V விமலராணி கனகரத்தினம், கொக்குவில் மேற்கு.

076920834 V குஞ்சாட்சி சின்னத்தம்பி, நெடுந்தீவு கிழக்கு

465100257 V ஜெயமங்களம் துரைசிங்கம், வண்ணார்பண்ணை.

296210498 V ரத்தரீனு அல்பிறட், புங்குடுதீவு.

517462543 V நல்லை நடேசன் திருபாக்கியம், கதுருவெல.

647652484 V மரியநாயகம்மேரிகுணஸ்வின், முரசுமோட்டை.

536062793 X நித்தியலட்சுமி விஜயராஜ், வண்ணார்பண்ணை.

665690482V புவனேஸ்வரன் மதிவதனு, கொக்குவில்.

562362495 V கந்தையா கருணாநிதி, சாவகச்சேரி.

603300580 X சிவக்கொழுந்து சுந்தரராஜா, யாழ்ப்பாணம்.

232110511 V சிவசுப்பிரமணியம் சிவஞானம், உடுவில்.

220530230 V சங்கரலிங்கம் அம்பலவாணர், திருகோணமலை.

362760372 V கந்தையா சிதம்பரப்பிள்ளை, பலாலி

696311617 V முதலித்தம்பி சத்தியசோதி, நீர்வேலி தெற்கு.

661831901 V சுப்பிரமணியம் நந்தசாமி வண்ணார் பண்ணை

342942563 X குமாரசாமி இரத்தினசிங்கம் கொழும்பு - 12

462702167 X சிவக்கொழுந்து ஹரிச்சந்திரன், மாபலைவதுவர.

63334117 V முத்தன் வேலாயுதம் லோகேஸ்வரன், தெல்தெனிய.

260130773 V கதிரவேலு மருதை, விஜயபுர.

336490090 V தங்கேஸ்வரி சுப்பிரமணியம், வலிகாமம் கிழக்கு.

553330483 V வேலும்மயிலும் விக்னேஸ்வரன் இளவாலை.

635810912 V அமிர்தம் அமலிரேஸ் கரம்பன்.

483112475 V சவேரியான் சார்ள்ஸ் பெர்னன்டோ சங்கானை.

32051605 V தம்பையா கார்த்திகேசு உடுவில்.

622352923 V வின்சன் யோசப் அலெக்ஸ் யாழ்ப்பாணம்.

546861716 V-சந்தியோகு ஜெனோவா முதலியார்குளம்.

457600607 V கிருஷ்ணதேவி குணரத்தினம்- நல்லூர்.

600781901 X கிருஷ்ணசாமி ரகுநாதன் வண்ணார்பண்ணை

408630169 V அன்னலக்ஷ்மி பொன்னுத்துரை— சுதுமலை தெற்கு.

575014631 V அப்துல் வஹாப்வித்தி ஹலீமா— தர்காநகர்.

492253715 X நாகமுதது கிட்ணன்— மயிலிட்டி

437270724O V பூரணம் அருளானந்தம்— ஆனைக்கோட்டை.

456130996 V தேவபுஷ்பம் தேவநாசன்— ஏழாலை.

320150248 V வீரசுத்தி செல்வராசா— யாழ்ப்பாணம்.

495950794 V அந்தோனி ஸ்டெல்லா குரூஸ் — சினக்குடா.

455393739 V செல்வராசா நாகேஸ்வரி— கரவெட்டி.

666632702 V நடராசா வைஜயந்திமாலா–தாளையடி.

611582366 V சின்னராசா யோகராசா- சாம்பல்தீவு.

683321346 V யோசேப் பற்றிக்வாஹின்றன் கிளே—குருநகர்.

653570570 V – சோமசேகரம் ஞானசேகரம், வண்ணார்பண்ணை.

496820258 V -பாக்கியலக்ஷ்மி இளையப்பா, உரும்பராய்.

643512779 V - செல்லையா பாலச்சந்திரன், யாழ்ப்பாணம்.

387061258V-விக்னேஸ்வரி சிவபாலன், வண்ணார்பண்ணை.

273471332 X-கந்தையா விஜயமூர்த்தி, கஞபான.

407961285 V- நாகேஸ்வரி பூபாலசிங்கம் புதுக்குடியிருப்பு

351731389 X - கந்தையா தியாகராஜா, புன்னாலைக்கட்டுவன்.

531925459 V - தருமலிங்கம் தேவராசா, சாவகச்சேரி.

638642700 X – ஆறுமுகம் சிவரத்தினபதி, உடையார்கட்டு.

603601092 V–முருகுப்பிள்ளை குணேந்திரன், காங்கேசன்துறை.

458352968 V - தருமலீலாதேவி விசயரத்தினம் வலிகாமம் தெற்கு.

277901510 X - வேலு பச்சையம்மாள், றங்கலை.

490783318 X-பவ்லிஸ் அர்னோலிஸ், யாழ்ப்பாணம்.

496582985 V-நாகேஸ்வரி கந்தையா, கொழும்பு- 13

640033134 V–சபாபதி வேலுப்பிள்ளை, ஈச்சிலம்பத்தை.

392330305 V- இராமநாதர் பாலசுப்பிரமணியம் வலிகாமம்

646560730 V - மயில்வாகனம் மாலதி, மயிலிட்டி.

606452926 V – யோகலிங்கம் சிவரஞ்சி, தண்ணீரூற்று.

397910598 V – நேசமணி வேலாயுதம் மானிப்பாய்

472922734 V - சிவசுப்பிரமணியம் சேசானந்தம், ஹெந்தலை.

483242018 V-சுந்தரம் வேலாயுதபபிள்ளை, நல்லூர்

457471602 X - கருணாகரன் ஆனந்தவள்ளி, உப்புவெளி.

302591814 X - அருணாசலம் வேலாயுதம் கொழும்பு – 7

6516 1786 V – கிறிஸ்தோப்பர் தேவதாஸ், குருநகர்

547890167 X - ஆரியமுத்து புஸ்பலீலா, மாத்தளை

593021912 X– கோவிந்தசாமி சுந்தரலிங்கம், லபுகல.

682571551 V–அமிர்கநாதன் அல்போன்ஸ் அமிர்தராஜா, திருகோணமலை.

242981080 V விஜயகரத்தினம் இரத்தினம், காங்கேசன்துறை

[illegible] V சோதிமுத்து செல்வமணி, குருநகர்.

528360122 V - இராசம்மா சபாபதி, வலி கிழக்கு.

536212132 X - புவனேஸ்வரி கந்தையா, யாழ்ப்பாணம்.

181951109 X – தம்பியப்பா சிவானந்தன். வந்தாறுமூலை.

கண்டெடுக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் அடையாளக் கார்ட்டுகள் வருமாறு.–

குமரையா சசிவண்ணன் காரைநகர் தியாகராஜா ம.வி.

தருமபுத்திரன் தயனினி இளவாலை மெய்கண்டான் ம.வி.

ஜோசப் யோகராஜா வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி.

பொன்னம்பலம் ஜெயக்குமார் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரி.

செல்லத்துரை ரவி- யாழ் மத்தியகல்லூரி.

மு. விஜயகுமாரன்- யாழ்.சன்மார்க்க ம.வி.

வி துரேஸ்வரி-உடுவில் மகளிர் கல்லூரி.

கண்டெடுக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் வருமாறு:-

பொன்கவர் அன்ரன் நெஜி - புதுக்குடியிருப்பு.

எஸ். கமலநாயகி— கோண்டாவில்.

சதாசிவம் விஜயரட்ணம்— குருநகர்.

எஸ். புஸ்பராணி- நாவாந்துறை.

து. சுபாஜினி—வல்வெட்டித்துறை.

ஏ. விசுவலிங்கம்—திருநெல்வேலி.

கண்டெடுக்கப்பட்ட அலுவலக அடையாளக் கார்ட்டுகள்:—

எம். மகேந்திரராஜா- கோப்பாய்.

த. ரவீந்திரன்— திருகோணமலை.

வாகனச்சாரதி லைசென்ஸ் வருமாறு.—

குமாரசாமி திரவியராஜா—018879.


## 31 ஆம் நாள் நினைவுஅஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**காசிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை**

(பெருந் தெருக்கள் திணைக்கள பொறியியலாளர்)

மலர்வு: 26. 12. 1939 — உதிர்வு: 30. 09. 1988

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர். நண்பர்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்குக் கொள்ளுகின்றோம். ஞாயிற்றுக்கிழமை 30. 10. 1988 எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகின்றோம்.

— மனைவி, பிள்ளைகள்.

9, அரசடி ஒழுங்கை,
நெடுங்குளம் வீதி,
அரியாலை. (7580)


## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மண்வெட்டிகள்

மானிப்பாய், அக். 30

அண்மைக்கால சம்பவங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் சமநல சேவை நிலையங்கள் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட மண்வெட்டிகள் வழங்கப்பட இருப்பதாக யாழ்ப்பாண மாவட்ட சமநல சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் தெரிவித்தார்.

இதற்காக சுமார் ஐயாயிரத்து முன்னூறு முதலைமார்க் மண்வெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அப்பன், கீரிமலை, புலோலி, புத்தூர். உரும்பராய், உடுவில் ஆகிய சமநல சேவை நிலையங்களிலும் மண்டைதீவு பயிர்செய்கை உத்தியோகத்தர் பிரிவிலும் தெரிந்தெடுக்கப்பட்ட கமக்காரர்களுக்கு இவை முதலில் வழங்கப்படும் என்றும், ஏனைய பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்கு அடுத்த கட்டமாக மிக விரைவில் மண்வெட்டிகள் வழங்க தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஜ-90)

## பதில் மேலதிக பதிவாளர்

முல்லைத்தீவு, அக் 30

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக பதிவாளர் திருமதி ம. இராசரத்தினம் லீவில் சென்றுள்ளார்.

திரு. எஸ் கனகசபாபதி பதில் மேலதிக பதிவாளராகக் கடமையாற்றும்படி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலத்தினால் பணிக்கப்பட்டுள்ளார் [இ-92]


## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் கி. பிரதீபன்**

டென்மார்க்கில் வதியும் கிருஷ்ணகுமார்-புஸ்பராணி தம்பதிகளின் அருமைப் புதல்வன் பிரதீபன் இன்று இரண்டாவது பிறந்த தினத்தை டென்மார்க்கில சிரும் சிறப்புமாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல கலைகளும் சுற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். (7578)



## கூட்டுறவு வைத்தியசாலை—மூளாய் புனர்வாழ்வு இல்லம்

வயது முதிர்ந்தோர், மனநோய் வைத்திய சிகிச்சைக்குப் பின் அவசிய கண்காணிப்பு தேவைப்படுவோர் எதிர்வரும் தைமாதம் 1989ஆம் ஆண்டு ஆரம்பிக்க இருக்கும் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கி இருக்க விரும்பின் அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்புனர்வாழ்வு இல்லத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் வைத்தியசாலை அலுவலகத்தில் விண்ணப்பப்பத்திரங்களையும் விபரங்களையும் 1-11-88 தொடக்கம் 30-11-88 வரையில செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய தினங்களில் 9 00 மணிக்கும் 11 00 மணிக்கும் இடையில் பெற்றுக் கொள்ளலாம்

- தலைவர்

(C / 675)



## புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது!

சில்லறை விலை ரூபா 68/55 125 கிரும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு

# போதிய பஸ்கள் வந்தபின்பே

# தனியாக பாடசாலைச் சேவை

யாழ்ப்பாணம், அக். 30

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குப் போதிய பஸ்கள் வந்து சேர்ந்த பின்பே தனியாக பாடசாலை சேவை நடத்தப்படும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

சடந்த காலங்களில் பாடசாலை சேவைக்கென 33 பஸ்கள் சேவையில் ஈடுபட்டன

தற்பொழுது ஏனைய பயணிகளுடன் சேர்ந்தே பாடசாலைச் சேவையும் நடைபெறுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-10)

## பரிசளிப்பு விழா

சுன்னாகம் தெற்கு அமரர் சிவபாதம் ஞாபகார்த்த பாலர் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது

பாலர் பாடசாலைக்கான பரிசுகளை யாழ். ஆஸ்பத்திரி சம்பவத்தில் ஒரு வருடத்துக்கு முன் இறந்த சிவபாதத்தின் தந்தை இரு. எஸ் செல்லர் வழங்கினார்.

# அதிபர்கள் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவேண்டும்

சுன்னாகம் அக் 30

பாடசாலைகளை நடத்துவதில் அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும்

மானிப்பாய் கல்வி வட்டார பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றும் பொழுது கல்வி அதிகாரி திரு.எஸ் தனஞ்செயன்மேற்கண்டவாறு கூறினார்.

இக் கூட்டம் இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. தனஞ்செயன் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

பாடசாலைகளை ஒழுங்காக நடத்துவதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் ஆண்டிறுதிப் பரீட்சைகள் பொதுப்பரீட்சைகளுக்கு மாணவர்கள் தயாராக்கப்பட வேண்டும்—

அதிபர்கள் ஆசிரியர்கள் தமது கடமைகளை உணர்ந்து செயலாற்ற வேண்டிய நேரம் இது.


இவ்வாறு அவர் கூறினார். (ச 27)

## பதவி உயர்வும் இடமாற்றமும்

பருததித்துறை, அக். 30

பருத்தித்துறை நகர சபையில் இலிகிதராகக் கடமையாற்றிய திரு. தர்ம விமலேந்திரன் முதலாம் தர இலிகிதராக உள்ளூராட்சித் திணைக்களத்தால் பதவி உயர்த்தப்பட்டு மன்னார் பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் (இ-118)





யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியின் வெள்ளி விழா அண்மையில் நடைபெற்றதும் வெள்ளி விழா மலரான ''அல்ஹிகமா'' வின் முதல் பிரதியை கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகத்திடமிருந்து அல்ஹாஜ் எம். எல். அப்துல் காதர் பெறுவதை முதலாவது படத்தில் காணலாம்.

கல்விப்பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் ஜனாப்: எம் எம். யூசுப் கல்லூரியின் ஆரம்பகால அதிபர் ஜனாப் சி எம். ஏ ஜிப்ரி, கல்லூரியின் தற்போதைய அதிபர் ஜனாப் ஏ செ ஹமீம் ஆகியோர் உரையாற்றுவதை மற்றைய படங்களில் காணலாம்

# யாழ் முஸ்லிம் வி. கழகம்

## வவுனியா தெரிவுக் கோஷ்டி மோதலில் வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம் அக்- 30

ஒஸ்மானியாக் கல்லூரி வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகத்துக்கும் வவுனியா தெரிவுக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

வெள்ளி விழா நிகழ்ச்சிகளில் மூன்றாம் நாளான 23ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டிக்கு ஜனாப் எம் எம். யூசுப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

4ஆம் நாள் நிகழ்ச்சியாக 24ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அரியாலை யுனைடெட்டை எதிர்த்து யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகம் 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட்டில் ஈடுபட்டது. அரியாலை விளையாட்டுக் கழகம் இதில் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு வெள்ளி விழா குழுத் தலைவரும் பாடசாலை அதிபருமான ஜனாப் ஏ. எச். ஹாமிம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மாலை 3-30க்கு இரு உதைபந்தாட்டப் போட்டிகளும் இடம் பெற்றன

பொற்பதி விளையாட்டுக் கழகம் சென்.மேரிஸுடன் மோதி வெற்றி பெற்றது யாழ் ஒஸ்மானிய மாணவர் குழு, பழைய மாணவர்களுடன் மோதி வெற்றி பெற்றது.

பிரதம விருந்தினர் முன்னை நாள் அதிபர் எம்.ஏ ஆர்.ஏர ஹிம் சகல விளையாட்டுப் போட்டிகளுக்குமான பரிசில்களை வழங்கினார். (இ)

யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில்

# ஆயுள் காப்புறுதி தொடர்பான வேலை மட்டுமே

யாழ்ப்பாணம், அக் 30

யாழ்ப்பாணப் பிரதேசக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் காரியாலயத்தில் ஆயுள் காப்புறுதி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் மட்டுமே நடைபெறுகின்றன.

பொதுக் காப்புறுதி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுவதில்லை.

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் முதிர்வடைந்திருந்தால் அதற்கான ஒப்பந்தப் பணம் கையளிக்கப்படும் வேலைகளும் ஆயுள் காப்புறுதி தவணைப் பணம் அறவிடுதலும் கிரமமாக நடைபெறுகின்றன.

வடபகுதியைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்கள் வீதியில் பயணம் செய்வதற்குத் தேவையான மூன்றாம் கட்சி காப்புறுதி ஒப்பந்தத்தை அநுராதபுரம் கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளைகளிலேயே செய்து கொள்கின்றார்கள் (ஒ-5)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம் அக் 30

கல்வி நிர்வாக ஆணைக் குழுவின் சேவையாளர் தரம் 2 -க்கு பதவி உயர்த்தப் படுவதற்காக போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில் சிலர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் மட்டுமே இதுவரை யாழ் கல்வித்திணைக்களத்தில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்

மேலும் சிலர் அடுத்த சில தினங்களில் அழைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை காலமும் சேவையாளர் தரம் 3 இல் கல்வி அதிகாரிகளாக இருந்தவர்களை தரம் 2 இல் பிரதம கல்வி அதிகாரிகளாக பதவி உயர்த்துவதற்கே இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படுகிறது. (8-9)

# போதைப் பொருள்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை நீண்ட காலம் பாவிப்பவர்கள் மதுப் பழக்கம் உள்ளவர்கள் போல் தோற்றமளிப்பார்கள் நடையில் தள்ளாட்டம், நாக்குழறுதல், ஞாபக மறதி என்பன ஏற்படும் போதைப் பொருளை சடுதியாக நிறுத்துவதால் வலிப்பு ஏற்படும். தற்கொலைகளுக்கும் காரணமாகின்றது.

6. எல் எஸ் டீ. (L. S D) இதனைப் பாவிப்பவர்களுக்குச் சந்தேகங்கள், மனநிலையில் அவ்வப்போது மாறுதல்கள் என்பன ஏற்படும் சிலர் மனநோயாளிகளைப் போல் நடந்து கொள்வர். சிலர் பயத்தினால் தற்கொலையும் செய்யக்கூடும். சிலர் வெறித்தனமான செயல்களைச் செய்வதுடன் தங்களைக் காயப்படுத்தியும் கொள்கின்றனர் L.S.D. ஒரு சாந்த குணமுள்ள இளைஞனை முரடனாக மாற்றி விடுகின்றது.

7. கஞ்சா - Cannabis, Hashish Marjuana என்பன உடனடியாக உற்சாகத்தைக் கொடுத்து பின்பு மனச்சோர்வை ஏற்படுத்தும். இதனைப் பாவிப்பவர்களுக்கு உடல் - உளம் சார்ந்த அறிகுறிகள் காணப்படுகின்றன. பிறரைத் தாக்கும் வெறிபிடித்த நிலை தற்கொலை முயற்சிக்குஎத்தனித்தல், தனிமையை விரும்புதல். சிந்தனையில் மூழ்கிக் கிடத்தல், உளநோய்கள் தோன்றும் அவலம் என்பன ஏற்படலாம்.

(தொடரும்)

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம் அக் 30

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள 14 பாலர் பாடசாலைகளின் 22 ஆவது வருடாந்த கலை நிகழ்ச்சியும் பெற்றோர் தினவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 30 மணி முதல் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

கழகத்தலைவர் திரு ஆ செல்லையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு வைத்தீஸ்வர வித்தியாலய உப அதிபரான திரு. எஸ் இராஜதுரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கழகம் நடத்திய பேச்சுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவமும் இவ்விழாவில் இடம்பெறும். (இ)

## காட்டுப்புலத்தில் கூட்டுறவு விற்பனைக்கிளை

சுழிபுரம் அக் 30

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதி மக்களின் நன்மை கருதி ஒரு கூட்டுறவுச் சங்க விற்பனைக் கிளையையும் வைத்திய பரிசோதனை நிலையத்தையும் காட்டுப்புல அரசினர் பாடசாலைக்கு அருகாமையில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுழிபுரம் அபிவிருத்தி கழகத்தினர் இதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர். (ச-ரி)

# தனியார் கல்வி நிறுவனங்கள்

## வளர்ச்சி அடையக்காரணம் என்ன?

யாழ்ப்பாணம், அக் 30

உயர்கல்வியில் வளர்ச்சியின்மை, தொழில்நுட்பக் கல்வியில் வளர்ச்சியின்மை, 1965 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழக தகுதிகாண் பரீட்சை பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டிப் பரீட்சையாக மாற்றமடைந்தமை ஆகிய காரணங்களே தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்தன.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்

யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தின் வருடாந்தப்பரிசளிப்பு விழா கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 00 மணியளவில்நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உரை நிகழ்த்தினார்.

தனியார் கல்வி நிறுவனங்கள் திடீர் என்று தோன்றிய அமைப்புக்களல்ல.

எமது நாட்டில் 10 ஆயிரம் அரசபாடசாலைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட கால அளவிற்குள் எமது கல்வி அமைப்பின் பாடவிதானத்தை இந்த பாடசாலைகளினால் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது

மேலும் அதிகமான பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் இல்லை அதாவது குறிப்பிட்டு கூறுவதானால்ஒரே ஒரு ஆசிரியரைக் கொண்ட பாடசாலைகளும் எமது பகுதிகளில் உண்டு.

இவ்வாறான காரணங்களால் மாணவர்கள் தமது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய தனியார் நிறுவனங்களை நாடுவது அவசியமாகின்றது.

இப்படி மேலும் அவர் கூறினார்

கல்வி நிறுவன இயக்குனர் திரு. பொ, ஐங்கரநேசன் தலைமையுரை நிகழ்த்துகையில் கூறியதாவது :-

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை அமைப்பானது கல்வி என்ற அலகின் மீதே கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

இன்று தென்பகுதியில் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்திலோ கடுமையான இராணுவநடவடிக்கைகளின் போதும் பாடசாலைகள் இயங்கின.

கல்வியைப் பொறுத்தளவில் ஒரு பாரிய இடைவெளி ஏற்படுத்தப்படுமானால் அதை திருப்ப முடியாது. இதை மனதில் கொண்டு நாம் செயற்பட வேண்டும்.

இன்று ஆசிரியர்களைக் கனம் பண்ணும் மனப்பாங்கு குறைந்து வருகிறது, இதனை இல்லாது செய்வதற்கு வருடத்தில் ஓர் நாள் ஆசிரியர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு அனுசரிக்கப்பட வேண்டும்

இப்படி அவர்கூறினார்.

விழாவில் கல்விநிறுவன மாணவர்கள் பங்கு கொண்ட கலைநிகழ்ச்சிகளும் கம்பன் கழகத்தினர் பங்கு கொண்ட 'குற்றவாளிக் கூண்டில் இராமன்' என்ற வழக்காடுமன்றமும் இடம் பெற்றன. (இ-5)

# குதிரை கொண்டு வராததால் குமரபுரவியைத் திருப்பி அனுப்பிய கடற்படையினர்!

நெடுந்திவு அக் 30

குதிரைக்குட்டி கொண்டு வரவில்லை என்பதற்காக பொருள்களுடன் வந்த படகை மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே திருப்பி அனுப்பினர் நயினாதீவில் உள்ள ஸ்ரீ லங்கா கடற்படையினர். இதுபற்றி கூறப்படுவதாவது:

''குமரபுரவி'' என்ற படகின் சொந்தக்காரரிடம் தமக்கு நெடுந்தீவில் இருந்து குதிரைக்குட்டி ஒன்று கொண்டு வந்து தரும்படி நயினாதீவில் உள்ள கடற்படையினர் வற்புறுத்தி வந்தனர்.

வழமைபோல் அவரது ''குமரபுரவி'' நெடுந்தீவில் இருந்து பொருள்களுடன் குறிகாட்டுவானுக்குச் செல்வதற்காக நயினாதீவு சோதனை முகாமில் நிறுத்தப்பட்டது.

படகு உரிமையாளரிடம் குதிரை பற்றி விசாரித்தனர் படையினர்.

குதிரை பிடிக்கக் கூடியதான நிலை அங்கு இல்லை என்று அவர் பதில் அளித்தாராம்.

ஆத்திரமுற்ற படையினர் படகில் பொருள்களுடன் வந்த பிரயாணிகளையும் ''பதம்பார்த்து'' ஏற்றிவந்த பொருள்களுடன் படகை மீண்டும் நெடுந்தீவுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டனராம். குதிரைக்குட்டி இன்றிக்குமரபுரவி குறிகாட்டுவானுக்கு வரக்கூடாது என்று படகு உரிமையாளர் அச்சுறுத்தப்பட்டாராம்.

நெடுந்தீவில் இருந்து குதிரைகளை அரச அதிபரின் அனுமதியின்றி எவரும் வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-111)

# ஒவ்வொரு வீட்டிலும் இஸ்லாமிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்

## மீலாத் விழாவில் உரை

யாழ்ப்பாணம், அக் 30

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை விழாவெடுத்துக் கொண்டாடும் நாம், அவர்களது வாழ்க்கை நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எமது வாழ்க்கையில் அவற்றைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்

இஸ்லாமியப் போதனைகளை வாழ்க்கையில் அமுல்படுத்துவதற்கு முன், ஒவ்வொரு வீட்டிலும் இஸ்லாமிய சூழல் ஏற்படுத்தப்பட்டு அவர்களது ஈமான்உரமூட்டப்பட்டு பக்குவப்படுத்தப்பட வேண்டும். இப்பொறுப்பு ஒவ்வொரு பெற்றோரையும் சார்ந்தது இதனால்தான் பெருமானார்(ஸல்) அவர்கள் ஒரு தகப்பன் தனது பிள்ளைகளுக்கு சிறிய ஒழுக்கத்தை விட எதனையும் கொடையாகக் கொடுக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

யாழ்பாணம் புதிய சோனகத் தெருவில் மஃரிப் தொழுகையை அடுத்து நடைபெற்ற மீலாத் விழா நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக அறபு. இஸ்லாமிய நாகரிக விரிவுரையாளர் அல் ஹாஜ் [illegible] அப்துர் ரஸ்ஸாக் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய சோனகத்தெரு மஸ்ஜித் அபீபக்ர் பள்ளி பேஷ் இமாம் மௌலவி அல்ஹாஜ் எம். எம் நாகிப் தலைமையில் வைபவம் நடைபெற்றது

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மௌலவி அப்துர் ரஸ்ஸாக் இன்று அல் குர்ஆனின் சூழல் முஸ்லிம் வீடுகளில் இல்லை. குர்ஆனிய சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாக முஸ்லிம்களை விட்டும் விடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தாய்மார்கள் குப்பி விளக்குகளை வைத்துக்கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கு குர்ஆனைக் கற்றுக்கொடுத்த காலம் மலையேறிவிட்டது. நவீன பொழுதுபோக்குச் சாதனங்களில் இவர்கள் அதிக அக்கறை கொண்டதால் அல்-குர்ஆனின் ஈடுபாடு குறைந்து கொண்டு போகின்றது. திரும்பவும் குர்ஆனின் ஈடுபாட்டை உயிர் பெறச் செய்வதன் மூலமே குர்ஆனிய சமுதாயம் உருவாக்கப்படலாம்' எனக் கூறினார்.

கூட்டத்தில் மௌலவிகளான எஸ். எச். கலீலுர்ரஹ்மான், எம் எஸ். செய்யத் முஹம்மத் கே. பீ. நஸார்தீன், எம். எம். மஃரூப் ஆகியோரும் உரையாற்றினர். (இ)

## கற்குளி கந்தசாமி கோயில் நிர்வாகிகள்

நுணாவில் கிழக்கு, கற்குளி கந்தசாமி கோயில் பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு செ. குமாரசாமி ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர், உப தலைவர்:- திரு வி. பொன்னையா. ஓய்வுபெற்ற பொது வேலைப்பகுதி மேற்பார்வையாளர்.

செயலாளர்;- திரு பொ. குமாரசாமி ஓய்வு பெற்ற கணக்காய்வாளர். துணைச்செயலாளர்:- திரு. செ. தில்லைநாதன், பொருளாளர்:- திருமதி ப. செல்லத்துரை ஓய்வுபெற்ற ஆசிரியை [illegible] நாதகர்:- திரு. சி. கந்தையா. (இ)

# ஓராண்டு நினைவஞ்சலி



## துரைச்சாமி கிருபாகரமூர்த்தி [குட்டி]

மண்ணில்:- 27-12-1966 விண்ணில் - 11-11-1987

திதி: 30-10-88

பெற்றோரும், உற்றோரும், உடன்பிறந்த சோதரரும் உன்குறும்பில். விளையாட்டில், உதட்டில்விளை குறுஞ்சிரிப்பில் தமைமறந்து களித்ததெலாம் மகறகனவாய் ஆனதுவோ? கணம் உன்னைப்பிரிந்தாலும் கலங்கிப்பரிதவித்தோம் பிணவடிவில் காண்டற்கும் வழி கிடைக்காப்பாவிகள் நாம் ஆண்டொன்றாய் நீ திரும்பி வந்திடுவாய் எனநினைந்து காத்திருந்த கண்களெலாம் பூத்துப் போய்விட்டனவே! ஆறாத்துயரும், அழுதகண்ணீர் வெள்ளமுமாய் நீறான நெஞ்சோடு நினைத்திருப்போம் குட்டிஉனை!

தாயார், உடன் பிறந்தோர், உறவினர், நண்பர்கள்.

குமரகோட்டம், கோண்டாவில். (7581)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

**பொருள்:**
உயர்ந்த குடியில் பிறந்து தன்னிடத்தில் வரக்கூடிய பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்புக்கொள்ள வேண்டும்.


# உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 292/2நாவலர் வீதி, தொலைபேசி: 24805, 22073
யாழ்ப்பாணம்.
30-10-1988 த. பெ இல 23


## வஞ்சம் தீர்க்கிறதா?

கடந்த வருடம் மே மாதத்தில் நடைபெற்ற இலங்கைப் படைகளின் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையின் போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இதுவரை உரிய முறையில் நிவாரணம் வழங்கப்படவில்லை என்று புகார் கூறப்படுகிறது.

1983 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைப் படையினர் வடக்கில் தொடுத்த மிகப்பெரிய இராணுவத் தாக்குதல், வடமராட்சியில் நடத்திய 'ஒப்பரேஷன் லிபரேஷன்' தான்!

வேற்று நாட்டில் இருந்து வந்தவர்கள், இந்த மண்ணை ஆக்கிரமிப்பதற்காக நடத்திய பெரும் போரைப் போன்று, தமிழ் மண்ணான வடமராட்சியை தமிழ்ப் போராளிகளின் பிடியில் இருந்து மீட்டு, அரசு வசமாக்கிவிட வேண்டும் என்ற உக்கிரத்தோடு, முழுச் சக்தியையும் பயன்படுத்தி இலங்கைப் படைகள் போராடின.

வடமராட்சி மக்கள் இலங்கைப் பிரசைகள் என்ற எண்ணமே இல்லாமல், போராளிகளை வெல்வதாகக் கூறி, ஐந்து நாட்களில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்து வெற்றிப் பிரமிதம் அடைந்தார்கள்.

வடக்கைக் கைப்பற்ற வடமராட்சி 'ஒப்பரேஷன் லிபரேஷன்' முதலாவது கட்டம், அதனைத் தொடர்ந்து அடுத்த கட்டங்கள் செயற்படுத்தப்படும் என்று சின்னப்பிள்ளைத்தனமாக அறிவித்தார் அமைச்சர் அத்துலத்.

இலங்கை இராணுவத்தின் அத்தனை உயர் அதிகாரிகளும் தமது போர் தந்திரங்களையும், புதிய உத்திகளையும் தமது உயர் சக்திக்கு ஏற்றவரை களத்தில் நேரில் இறங்கிப் பயன்படுத்திய தமிழ்ப் போராளிகளுடன் போராட வேண்டி இருந்தது தமிழ்ப் போராளிகளுடன் போர் புரிவதென்றால் எவ்வளவு விலைபோகும் என்பதையும் இலங்கைப் படையினர் கணக்கெடுக்கத் தவறி இருக்கமாட்டார்கள். எத்தனை கடினமான கைங்கரியம் என்பதற்கு நிச்சயம் கணக்கு வைத்திருப்பார்கள். அதனால் அந்தப் போரில் பங்குகொண்டவர்களுக்கு அண்மையில ஜனாதிபதி பதக்கங்கள் சூட்டிக் கௌரவித்தார்!

வடமராட்சியில் செய்தது போல பத்து மடங்கு அநியாயத்தை மேலும் செய்யுங்கள் என்று சம்பந்தப்பட்ட படையினரை மேலும் தூண்டுவதற்காகவும் பதக்கம் வழங்கப்பட்டதாகவும் அர்த்தம் கூறலாம் அல்லவா? அரச படையினர் செய்த கொலைகள் போன்ற குற்றச் செயல்களில் இருந்து அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்குச் சட்டம் கொண்டு வரப்பட்டதும் அதையே காட்டுகிறது.

வடமராட்சியில் "கொலை" செய்தவர்களைப் பாராட்டி பதக்கம் வழங்குவதில் இருந்த கரிசனையும், அக்கறையும், ஒப்பரேஷன் லிபரேஷனில் கொலையுண்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதிலோ மறுவாழ்வு அளிப்பதிலோ அரசுக்கு இருக்கவில்லை

இந்தியப் படைகள் இங்கு வருவதற்கு முன், நாளொன்றுக்குக் கோடிக்கணக்கில் இராணுவச் செலவாக இறைத்த அரசினால், தனது படைகள் கொன்றவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பணம் இல்லாமற் போயிற்று?

ஒப்பரேஷன், லிபரேஷனில் உயிரிழந்தவர்கள் அப்பாவித் தமிழ் மக்கள் ஆகையால் அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணமோ அல்லது புனர்வாழ்வோ அளிப்பதில் அரசுக்கு அக்கறை எப்படி வரும்? தமிழர் என்றால் எதுவும் பின்னுக்குத் தானே ......!

தெற்கில் பஸ் விபத்தில் அல்லது ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனுக்குடன் நிவாரணமும், பின்னர் நஷ்டஈடும் வழங்கி, வானொலி, தொலைக் காட்சியில் ஒரு செய்தியுமாக்கிவிடுகிறது அரசு!

ஆனால் தமிழர் விடயத்தில் முழுதும் எதிர்மாறாகவே நடக்கிறது

சுதந்திரமும், உரிமையும் வேண்டும். அவை மனிதனின் ஜீவாதாரங்கள் என நினைத்து அவற்றை ஆதரித்ததற்காக கொலையுண்ட தமிழரது குடும்பங்கள் மீது வஞ்சம் தீர்ப்பதற்காகவா இன்னும் நிவாரணம் வழங்கப்படவில்லை?

அப்படியாயின், ஒப்பரேஷன் லிபரேஷன் படைவீரருக்குப் பதக்கம் அளிப்பதை அறிவித்தது போன்று, 'லிபரேஷனின்' உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்காது வஞ்சம் தீர்க்கப்படுகிறது என்றும் அரசு வெளிப்படையாக அறிவிக்கட்டும்!

வேண்டுமானால் நாமே கொன்றவரின் குடும்பத்துக்கு எப்படி நாமே உதவி செய்வது? அது பகைமை நீங்கி நட்பாகியதற்குச் சமமாகிவிடுமே என்று கேட்டும் வைக்கட்டும்.

---

கோரிக்கைகளை வற்புறுத்தி

# புதுடில்லியில் விவசாயிகள் முற்றுகை!

# காங்கிரஸ் பேரணி ரத்தாகும் ஆபத்து

புதுடில்லி, அக். 29

பல்லாயிரக் கணக்கில் விவசாயிகள் புதுடில்லி நகரைக் கடந்த சில தினங்களாக முற்றுகையிட்டுள்ளனர்.

தங்கள் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணாமல் ஊர் திரும்பப் போவதில்லை என்று அவர்கள் அறிவித்துவிட்டு தாங்கள் வந்த ட்ராக்டர்கள் மற்றும் வாகனங்களில் இரவு பகலாகத் தங்கியுள்ளனர்.

'வரட்சி காரணமாக நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். எமது உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யவேண்டும். மின்சாரவரியில் சலுகைதரப்படவேண்டும்'- இக் கோரிக்கைகளை வற்புறுத்திப் போராட்டம் நடத்துவதே இவ் விவசாயிகளின் புதுடில்லி விஜயத்தின் நோக்கம்.

### நிலைமையைச் சமாளிக்க ராஜீவ் அரசு தீவிர முயற்சி

இதனால் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இந்திரா காங்கிரஸ் கட்சி பேரணி ஒன்றை புதுடில்லியில் திங்கட்கிழமை (31.10.88) நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.

இதற்குப் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமை வகிக்க இருக்கிறார்.

இந்த நிலையில் ஆயிரக் கணக்கில் வந்துள்ள விவசாயிகள் காங்கிரஸ் பேரணியின்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலாம் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அப்படி இடம் பெற்றால் புதுடில்லியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவது முடியாது போய்விடும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் மத்திய அரசுக்கு அறிவித்துள்ளனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றால் தான் அவர்கள் புதுடில்லியை விட்டுச் செல்வார்கள்.

அப்படி அவர்களின் கோரிக்கையை ஏற்பது ஜனநாயக விரோதமான நெருக்குதல்களுக்கு பணிந்ததாகி விடுமே என்று மத்திய அரசு நினைக்கிறது. அல்லாவிடில் திங்கள் நடைபெற உள்ள காங்கிரஸ் பேரணியை ரத்துச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதும் மத்திய அரசின் இயலாத் தன்மையை வெளிப்படுத்திவிடும் என்று அரசின் சில வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்த நெருக்கடியை எப்படிச் சமாளிப்பது?- இது குறித்து மத்திய அரசு அமைச்சர்கள் குழு ஒன்று விவசாயிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

---

மீண்டும் 2 ஆண்டுகளுக்கு

## பிலிப்பீன்ஸில் தளங்களை அமெரிக்கா பாவிக்கும்

வாஷிங்டன், அக். 29

பிலிப்பீன்ஸில் உள்ள தளங்களைப் பாவிப்பதற்கு வழிவகுக்கும் புதிய உடன்பாடு ஒன்றை மணிலா அரசுடன் அமெரிக்கா நேற்றுச் செய்து கொண்டது.

வாஷிங்டனில் உடன்பாடு நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சரும்பிலிப்பீன்ஸ் வெளியுறவு அமைச்சரும் கையெழுத்திட்டனர்.

பிலிப்பீன்ஸில் உள்ள கிலார்க் விமானத் தளத்தையும் சுபிக் கடற்படைத் தளத்தையும் அமெரிக்கா அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு உபயோகிக்க இந்த உடன்பாடு வழி வகுக்கின்றது.

இதற்காக ஆயிரம் மில்லியன் டொலர்களை ஆண்டுதோறும் பிலிப்பீன்ஸுக்கு அமெரிக்கா வழங்கும்.

அதை விட பிலிப்பீன்ஸின் வெளிநாட்டுக் கடன்களை அடைக்கவும் அமெரிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. (எ)

---

**வெளி உலகில்**

### 150 பேர் உயிருடன் மீட்பு!

மணிலா, அக் 29

பிலிப்பீன்ஸ் கடலில் கடந்த திங்கட்கிழமை மூழ்கிய பயணிகள் கப்பலில் இருந்த 518 பேரில் 150 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இதுவரை, உயிரிழந்தவர்களில் 20 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

எஞ்சியவர்களின் நிலைமை பற்றி தகவல் இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

மணிலாவில் இருந்து 300 மைல்களுக்கப்பால் கடலில் சூறாவளி தாக்கி இக்கப்பல் மூழ்கியது தெரிந்ததே. (ஒ-எ)

### கைதி பரிமாற ஈரானும் சம்மதம்

தெஹ்ரான், அக் 30

காயமடைந்த போர்க் கைதிகளைப் பரிமாற்றம் செய்ய ஈரானும் இணங்கியது

இதனை தெஹ்ரான் அரசு ஐ நா. செயலாளருக்கு அறிவித்து விட்டது.

கைதிப் பரிமாற்றத்துக்கு முதலில் ஈராக் அரசு விருப்பம் தெரிவித்திருந்தது (எ)

### பத்து லட்சம் டொலர் செலவு

லண்டன், அக் 29

அலாஸ்கா கடலில் பனிப்பாறைக்குள் சிக்கிக்கொண்ட திமிங்கிலங்களை விடுவிக்கும் பணிக்கு 10 லட்சம் டொலர் பணம் செலவாகியது என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### 'யூகோ'வின் பொருளாதார நெருக்கடி

பெல்கிரேட், அக் 29

யூகோஸ்லேவியா பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளது.

இதில் இருந்து மீள உதவுமாறு யூகோஸ்லேவியா ஜனாதிபதி, சோவியத் யூனியனுக்குவேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

---

## மனிதன் உயர உள்ளம் உயர வேண்டும்
### சிவாஜி மணிவிழாவில் வாரியார் உரை!

சென்னை அக் 29

தமிழக முன்னேற்ற முன்னணித் தலைவர் நடிகர் சிவாஜிகணேசனின் மணிவிழாவின் போது அருள்மொழியரசு கிருபானந்தவாரியார் பாராட்டுக்கள் தெரிவித்தார்.

சென்னை, சிரணி அரங்கில் நடந்தஇவ்விழாவில் கிருபானந்தவாரியார் வாழ்த்துரை வழங்கிச் சொன்னதாவது

எல்லோரும் உயர்வு அடைய வேண்டும் என்று எண்ணுபவர் சிவாஜி கணேசன்.

பணத்தால் ஒருவர் உயர்வு பெற முடியாது. ரொம்ப மட்டமானவனிடமும் பணம்உண்டு. 5,6 கொலை செய்து விட்டவனிடமும் பணம் இருக்கும். எனவே செல்வத்தினால் உயர்வு அடைய முடியாது

**உயர்ந்த உள்ளம்**

படிப்பினாலும் உயர்வு அடைய முடியாது. மாணிக்கவாசகர் முதல- அமைச்சர் பதவி வேண்டாம் என்று பதவியை விட்டு வெளியேறினர். அவர் பாடினார்கற்றாரை வேண்டேன்,என்று ஜாதியினாலும், குலத்தினாலும் முடியாது ஜாதி என்பது மாகாணம். குலம் என்பது மாவட்டம்.

ஒரு மனிதன் உயரஉள்ளம்உயரவேண்டும் மலர் உயர வேண்டுமானால் தண்ணீர்உயர வேண்டும் என்பது போல மனிதன் உயர வேண்டும் என்றால் உள்ளம் உயர வேண்டும். உயர்ந்த உள்ளம் என்றால் பகைவனும் வாழ்க என்ற எண்ணம் வேண்டும் அப்படி உள்ளத்தால் உயர்ந்தவர் நமது சிவாஜிகணேசன்.

(ஒ-4)

---

## மடியிலே விழுந்த பதவியைக் காப்பாற்றத் தெரியாதவர்தான் நெடுஞ்செழியன்
### ஜெயலலிதா கிண்டல்

மடியிலே விழுந்த முதல்வர் பதவியைக் காப்பாற்ற முடியாதவர் தான் நெடுஞ்செழியன்.

இப்படிக் குற்றஞ்சாட்டினார் ஜெயலலிதா.

வேலூரில் பேசுகையில் அவர் சொன்னதாவது;

இந்த நாவலர் எப்படிப்பட்டவர் தெரியுமா?

அமைச்சராக இருந்த காலத்தில் மக்களுக்கு உதவாதவர்

எம் ஜி ஆரின் சத்துணவுத் திட்டத்தை எதிர்த்தவர் மக்களுக்கு நன்மைசெய்வது இவருக்குப் பிடிக்காத ஒன்று.

கருணாநிதி ஒரு ஊழல் பேர் வழி. முதல்வராக இருந்த சமயம் தம் பதவியை முறைகேடாக பயன்படுத்தி பரம்பரைக்கே சொத்துச் சேர்த்துக் கொண்டவர். இப்படிப்பட்ட கருணாநிதி மீண்டும் ஆட்சிக்கு வரத் துடிக்கிறார்.

தன் மகன் ஸ்டாலினை வாரிசாக்கத் துடிக்கிறார்.

கருணாநிதி ஒரு தீய சக்தி. அவரை மீண்டும் ஆட்சிக்கு வரவிடக் கூடாது எனஎம் ஜீ. ஆர் சொல்லியிருக்கிறார்.

இப்படி ஜெயலலிதா சொன்னார். (எ)

---

யாழ்ப்பாணத்தில் முதல் கட்டமாக

# 500 வீடுகளைப் புனரமைக்கும் வேலை விரைவில் ஆரம்பமாகும்

### ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் திட்டம்

கொழும்பு, அக் 30

யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது அகதிகளான மக்களின் வீடுகளைப் புனரமைத்துக் கொடுக்கும் வேலைகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின உயர் ஸதானிகராலயம் ஆரம்பித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக யாழ் மாவட்டத்தில் மொத்தம் 500 வீடுகளைப் புனரமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பமாக இருக்கின்றன.

முன்னோடித் திட்டமாக உடனடியாக இருபது வீடுகள் புனரமைக்கப்படும்.

வீடுகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டின் புனர் நிர்மாண வேலைக்கும் மொத்தம் பதினைந்தாயிரம் ரூபா ஒதுக்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்தத் தொகையில் பத்து முதல் இருபது சதவீதம் மாத்திரமே பணமாக வழங்கப்படும். எஞ்சிய தொகை கட்டட நிர்மாணப் பொருள்களாகவே வழங்கப்படும்.

வீடுகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் அகதிகளுக்கே முதலிடம் வழங்கப்படும். அடுத்த படியாக இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவி வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கும் பகுதிகளைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்களின் மூலமாகவே இந்த நிவாரண உதவி வழங்கப்படும்.

1989-ஆம் வருடம் இந்தத் திட்டத்தின் கீழ் யாழ் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் மற்றுமொரு தொகுதி பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளைப் புனரமைக்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் உதவிகளை வழங்கும். (ஐ)

---

### சமய நிகழ்வுகளில்

**ஞான வைரவர் மகா கும்பாபிஷேகம்**

யாழ்ப்பாணம், அக். 30

கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயக் காவல் தெய்வமான ஞான வைரவப் பெருமான் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

முப்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க் காப்பு விழாவும் நிறுவகர் நினைவுநாளும் வித்தியாலய அதிபர் திரு கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும். (ச)

---

### புத்தூர் கோத்தணியிலிருந்து மாவட்டப்போட்டிககு தெரிவானோர்

அச்சுவேலி அக் 30

புத்தூர் கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்ற இசை நடனப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்டரீதியில் நடைபெறும் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விவரம்.

ஆரம்பப்பிரிவு: அபிநய நடனம் முதலாம் இடம் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி (குழு)

சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு நடனம் முதலாம் இடம் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி (குழு)

தனிப்பாடல் (கிராமியம்) முதலாம் இடம் செல்வி- சி. லம்போதரா.

சாஸ்திரீய சங்கீதம் முதலாம் இடம் செல்வி- சி. லம்போதிரா - ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி புத்தூர்.

நாட்டார் பாடல்கள் முதலாம் இடம் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி (குழு)

சாஸ்திரீய சங்கீதம் முதலாம் இடம் ஆவரங்கால் நடராசா இராமலிங்கவித்தியாலயம் (குழு)

கனிஷ்ட இடைநிலைப் பிரிவு: சாஸ்திரிய சங்கீதம் முதலாம் இடம் ஆவரங்கால் நடராச இராமலிங்கவித்தியாலயம். (ச-11)

### தொழில் நுட்பக் கல்லூரி ஆரபபம்

மானிப்பாய், அக், 30

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி இவ்வாண்டுக்கான முதலாம் தவணை வகுப்புக்கள் 31 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

முதலாம் தவணை வகுப்புக்கள் டிசம்பர் 16 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் இரண்டாம் தவணைக்காக 1989 ஜனவரி மாதம் 2 ஆம்திகதி திறக்கப்படும் எனவும் கல்லூரி அதிபர் திரு. என். இராஜேந்திரா அறிவித்துள்ளார். (இ- 90)

---

### வாசகர் திருமுகம்

**யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட நூல் நிலையம் அவசியம்**

திறந்த பல்கலைக்கழகம் நடத்தி வரும் கல்வி நெறிகளில் சட்டமும் ஒன்றாகும். சட்டமாணிப் படிப்புக்குரிய வகுப்புக்கள் இதுவரை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவில்லை.

1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ள பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் இதற்கிடையில் சில பணிகளை நிறைவேற்றியாக வேண்டும்.

இவற்றில் பிரதானமாக விளங்குவது நூல் நிலையமாகும்

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் ஒரு சட்ட நூல் நிலயம் திருப்திகரமாக அமைக்கப்படவேண்டும்

இது அமைக்கப்படாவிட்டால் இங்கு வகுப்புக்களை ஆரம்பிப்பது சாத்தியமற்றதெனப் பல்கலைக்கழக உயரதிகாரிகள் தெரியப்படுத்தியுள்ளனர்

எனவே நூல் நிலயமொன்றை மூன்று மாத காலத்தில் அமைக்கவேண்டியுள்ளது

இதை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சட்டம் சம்பந்தமான சட்டப் புத்தகங்களை வைத்திருப்போர் அவைகளை நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புத்தகங்களை நன்கொடையாக வழங்க விரும்புவோர் அவற்றைத் தொழில் நுட்பக் கல்லூரியில் அமைந்துள்ள திறந்த பல்கலைக் கழகப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கவும்.

உதவிப்பணிப்பாளர், எம். மகாதேவா,
யாழ் திறந்த பல்கலைக்கழகம்.

---

## துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து காரைநகரில் பதற்றம்

காரைநகர் பழைய கண்டியில் வெள்ளிக்கிழமை பகல் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட சிலர் அதேதினம் இரவு அமைதிப்படையினரால் விடுவிக்கப்பட்டனர்.

கடைகள் பூட்டப்பட்டு, போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்த போதிலும்பின்புநிலைமை வழமைக்குத் திரும்பியது. (இ-73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற

* மணிப்புரி
* காஞ்சிபுர * பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்:

# உதயன்

30 - 10 - 1988 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங்ஸ் * சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

**மயூரா சென்ரர்**
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## 2ஆம் ஆண்டு நினைவு தினம்



**பொன்னம்பலம் விபுலானந்தன்**
[யாழ். மத்திய கல்லூரி மாணவர் தலைவன்]

உதயம்: 22-11-69 அஸ்தமனம்: 30-10-86

காலையிலே கடுகதியாய்
கல்லூரிக்கு வந்த உன்னை
காலன் அழைத்த
கொடிய சணத்தை
க[illegible]களவேனும் நாம்
எண்ணவில்லை ஐயா!
இனி உனை நாம்
எங்கே காண்போம்?
சிந்தனை நிறைந்த உன்
சிரித்த வதனத்தை
சிந்தையிலே நினைக்கையில்
எம் கண்கள்
சிந்தும் சிவந்த
கண்ணீர் முத்துக்கள்!
சித்தி நிறைந்த இறைவன் சித்தமும் இதுவோ
உமது ஆத்மா சாந்தி
அடைய பிரார்த்திக்கும்

**அப்பா, அம்மா, அண்ணன்மார், தங்கை, உற்றார், உறவினர்கள்**

64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (7582)

---

★ பாதுகாப்புத் தருகிறேன் ★ சந்தேகம் வேண்டாம்

# ஜே. வி. பியினரை வெளியே வருமாறு அழைக்கிறார் பிரதமர் பிரேமா

கொழும்பு, அக் 30

எங்கள் மீது சந்தேகம் கொள்ளாதீர்கள். தலைமறைவாக இருக்க வேண்டாம். வெளியே வாருங்கள். உங்களுக்கு நான் பாதுகாப்புத் தருவேன்.

பிரதமர் பிரேமதாசா, மக்கள் விடுதலை முன்னணியினருக்கு விடுத்த அழைப்பில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

மத்துகமவில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் இந்த அழைப்பை விடுத்தார். பிரதமர் மேலும் சொன்னதாவது;

சுதந்திரக்கட்சி அரசு தான் ஜே. வி. பியைச் சிறையில் அடைத்தது நாம் தான் அவர்களை விடுதலை செய்தோம்.

முதற்றாக சுதந்திரக் கட்சி எம்மைக் கண்டித்தது.

1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து ஜே. வி. பி. மீது தடை விதிக்கப்பட்டது.

சில அரசியல் கட்சிகள் மீது விதிக்கப்பட்ட தடையை அரசு நீக்கிய போது, ஜே. வி. பி. மீதான தடையையும் நீக்க வேண்டும் என்று நான் தான் வற்புறுத்தி வந்தேன்.

இன்று ஜே. வி. பி. தலைமறைவாகப் போய் விட்டது. அவர்கள் வெளியே வந்து இயங்க அச்சப்படுகிறார்கள்.

இப்படி பிரதமர் சொன்னார். (ஒ-எ)

---

ஆசியக் கிண்ண கிரிக்கெட்;

## இலங்கை அணியிடம் இந்தியா தோல்வியுற்றது!

டாக்கா, அக் 30

ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இலங்கைஅணி, இந்திய அணியை 17 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இலங்கை ஏற்கனவே பாகிஸ்தானைத் தோற்கடித்து இருப்பதால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் தகைமையைப் பெற்றிருக்கிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 45 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களை எடுத்தது.

அரவிந்த டீ சில்வா 69 ஓட்டங்களையும் அத்துலத் குணசேகரா 66 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இன்னொரு ஆட்டத்தில் பாகிஸ்தான் 171 ஓட்டங்களினால் பங்களாதேஷைத் தோற்கடித்தது.

இன்னொரு அரை இறுதிப் போட்டியில் பாகிஸ்தானும் இந்தியாவும் மோதுகின்றன. இதில் வெற்றியீட்டும் அணியுடன் இலங்கை அணி இறுதிப் போட்டியில் மோதும். (ஒ-எ)

---

## சடலம் யாருடையது?

யாழ்ப்பாணம் அக் 30

இந்திய அமைதிப் படையினரால் யாழ் ஆஸ்பத்திரியில் 45 வயதுடையஒருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலத்தை அடையாளம் காட்டுமாறு யாழ் பொலீசார் பொதுமக்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-10)

---

## 240 வருட சிறைத் தண்டனை

நியூயோர்க் அக். 30

போதைவஸ்துக் கடத்தல் வழக்கு ஒன்றில் எதிரி ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று 240 வருட சிறைத் தண்டனை விதித்தது.

எதிரியின் பெயர் அல் போன்ஸ் வல்ரிஸ்.

தண்டனையை விதித்த நீதிபதி எதிரியைப்பார்த்துச் சொன்னதாவது:

சிறையில் இருந்து பரோலில் விடுதலை பெறவேண்டும் என்றாலும் நீர் 60 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தே தீரவேண்டும் — இப்படி அவர் 29 வயதான எதிரியைப் பார்த்துச் சொன்னார். (ஒ-எ)

---

## புதுடில்லியில் நிலநடுக்கம்

புதுடில்லி அக் 30

புதுடில்லியில் இலேசான நில நடுக்கம் ஏற்பட்டது.

பிற்பகல் 2-40 மணியளவில் ஏற்பட்டநிலநடுக்கம் தலைநகருக்கு கிழக்கே 270 கிலோமீற்றர் தூரத்தில் உணரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

---

## சோவியத்விண்கப்பலின் பயணம் ஒத்திவைப்பு

கடைசிநேரத்தில்இயந்திரக் கோளாறு

நேற்றுக்காலை வானவெளிக்கு ஏவப்படவிருந்த சோவியத் யூனியனின் ஆளில்லா விண்கப்பல்'புரான்' (Buran) கடைசி நேரத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக ஏவப்படவில்லை.

சோவியத் யூனியனின் கஸாகஸ்தான் மாநிலத்தில் உள்ள பைக்கொனர் ஏவுதளத்தில் இருந்து இந்த விண்கப்பல் அனுப்பப்படவிருந்தது

இதை வானவெளிக்கு எடுத்துச் செல்லும் ரொக்கட் 'எனர்ஜியா' 'Energia'.

அதில் உள்ள உந்து சக்தியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஏவப்படுவது தடைப்பட்டது.

இரண்டாயிரம் தொன் எடையுள்ள இந்த ரொக்கட், வானவெளிக்கு 100 தொன் எடையுள்ள விண்வெளிக் கப்பல் ஒன்றை எடுத்துச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. செவ்வாய்க்கிரகத்துக்கு 27 தொன் எடையுள்ள விண்கப்பலைக் கொண்டு செல்லும் ஆற்றலையும் இது கொண்டது.

'புரான்' ஏவப்படுவது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விண்கப்பல் வானவெளியில் பயணஞ்செய்துவிட்டு ரிமோட்கொண்ட்ரோல் முறையினால் மீண்டும் பூமிக்குத் திருப்பி எடுக்கப்படும் நவீன நுட்பங்கள் பொருத்தப்பட்டது ஆகும். (இ-எ)

---

## தாயகம் திரும்பிய.....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

யாளர் திரு அ. யோசவ் மரியான், தொழில்நுட்ப வியலாளர் திரு. எஸ். உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

★ யாழ் மாவட்டத்தின் 9 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே இந்த 25 வீடுகளையும் முதலில் அமைப்பது

★ ஒரு மூடிய அறை, ஒரு திறந்த அறை, விறாந்தை ஆகியவற்றுடன் கூடிய வீட்டை 15 ஆயிரம் ரூபாவுக்குள் அமைத்துக் கொடுப்பது.

★ வீடு கட்டும் பணியை தேசிய வீடமைப்பு அதிகார சபை மூலம் மேற்பார்வை செய்து தேவைப்படும் பட்சத்தில் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

முன்னர் திட்டமிட்டபடி இந்த ஆண்டு இறுதிக்குள் 500 வீடுகளை அமைத்து முடித்தல். (ஒ-9)

---

## நேபாளத்திலும்

காத்மண்டு, அக் 30

நேபாளத்திலும் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

பிற்பகல் 3 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் 20 விநாடிகள் நீடித்தது

மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். (ஒ-எ)

---

## சுதந்திர....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றோனி டி மெல்தான், யு. என். பிக்குள் இருந்து கொண்டு அமைதி உடன்பாட்டை எதிர்ப்பவர்கள் 'துரோகிகள்' என்று கூறியவரும் இவர்தான்.

அது எனக்காக அவர் கூறியது.

தான் ஒரு 'சிட்' எம். பி என்பதை றோனி மறந்து விட்டார்.

1983 சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை அரசில் பலர் எதிர்த்தனர். அவர்களில் நிச்சயம் றோனியும் ஒருவர் அல்லர்.

பெரிய ஜனநாயகவாதி என்று கூறிக்கொள்ளும் றோனி டி மெல் 'சிட்' எம். பி நியமனத்தை வேண்டாம் என்று சொல்லவில்லை.

அமைதி உடன்பாட்டுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று றோனி டி மெல் இப்போது கூறி வருகிறார் பழியை ஜனாதிபதி மீது சுமத்துகிறார்

நன்றி என்பதில் ஒரு துளியாவது றோனி டி மெல்லிடம் உண்டா?

இப்படி பிரதமர் தெரிவித்தார். (ஒ-எ)

---

## வவுனியா...

(1 ஆம்பக்கதொடர்ச்சி)

கப்பட்டது.

அதை அடுத்து பிராந்திய தொலைத் தொடர்பு பொறியியலாளரின அலுவலகம், பிராந்திய மருந்துக் களஞ்சியம் என்பவை தொடர்ந்தும் அதே இடத்தில் இயங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பினால் சேதம் அடைந்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம் வேறிடத்திற்கு மாறவுள்ளது.

இதேவேளையில்அதிகாரிகள் ஊழியர்களின் நன்மை கருதி முக்கிய அரச அலுவலகக் கட்டடங்களுக்கு அருகில் படையினரின் முகாம் அமைந்திருக்கும் விடயம் சம்பந்தமாக அமைச்சுக்கள் மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அரச உயரதிகாரிகளில் ஒருவர் தெரிவித்தார். (ஒ-164)

---

## ஏழு கட்சி எதிரணியுடன் 3வது தடவை இன்று பேச்சு

கொழும்பு, அக். 30

ஏழு அரசியல் கட்சி கூட்டணிப் பிரதிநிதிகளுடன் மூன்றாவது தடவையாக இன்று ஜனாதிபதி ஜெயவர்த்தன பேச்சுக்கள் நடத்துவார்.

கடந்த வியாழன் இடம்பெற்ற இரண்டாவது சந்திப்பு இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்தன.

சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்துவது, அதைக் கண்காணிப்பதற்குக் கண்காணிப்புக் குழு ஒன்றை நிறுவுவது ஆகியன குறித்து பேச்சுக்கள் இடம்பெற்றன எனவும் —

இது குறித்து இருதரப்பாருக்கும் இடையே கருத்து உடன்பாடு காணப்பட்டதாகவும் கொழும்பு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

இடைக்கால சகுழு ஒன்றை ஜனாதிபதி நியமிப்பது குறித்தும் கருத்து உடன்பாடு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

---

## வேலை வாய்ப்பு

**லிபியா:**

சாரதி HVD
சம்பளம் 8 மணித்தியாலம்
9 - 10,000 வரை

(ஓவர்ரைம்) மேலதிக வேலை அதிகம் உண்டு. பாஸ்போட்,6படம், வாகனசாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றுடன் 2 - 3 நாட்களுள் தொடர்புகொள்ளவும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

கொழும்பில்

18 ¼, முதலிகே மாவத்தை,
கொழும்பு.

யாழ்ப்பாணம்

ந. பாஸ்கரன் J.P
இந்திராணி ஏஜென்ஸி
நெல்லியடி,
கரவெட்டி.
(7590)

---

## 180 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் குமாரகுலசிங்கம் வேலவன் (சாள்ஸ்)**

ஆண்டவன் படைப்பு: 31-07-1967
மரணம்: 30-04-1988

தமிழகம் உன் தாகம் என்றாய்; தாகந் தீருமுன்னே சாவை அணைத்தாய்; தியாகத்தால் நீ உணர்வூட்டிய தம்பிகள் உன் தாகத்தைத் தீர்ப்பார்கள், தாயகம் மலர்வது உறுதியாகும் அப்பொழுது எங்கள் அன்புச் செழியனே! உன் மலர்ச் சிரிப்பை நாமும் கண்டு மகிழ்வோம்!

தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

மாவிட்டபுரம். (C-705)

---

## பயனுள்ள பேச்சு....,

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

சூழ்நிலையை ஏற்படுத்தும்பொருட்டும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் தன்னை முழுமையாகஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

எம்மீது சுமத்தப்பட்டுள்ள இந்த வரலாற்றுக்கடமையை நிறைவேற்றும் மார்க்கத்தில் யாழ் பிராந்தியத்தில் பல்வேறு வெகுஜன அமைப்புக்களோடும் பல பயனுள்ள பேச்சுவார்த்தைகளை ஆரோக்கியமான சூழ்நிலையில் மேற்கொண்டுள்ளோம்.

குறிப்பாக யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம், யாழ் பிராந்திய மினிபஸ்சங்கம், பல தரத்திலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் பொது ஸ்தாபனங்கள் என்பனவற்றோடும் அரசுத்துறையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நகரப் பிரமுகர்கள் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் என்போருடனும் ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம்.

இப் பேச்சுவார்த்தைகளின்போது மீளவும் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் இவற்றை அடைவதற்கு இன்றுள்ள இடர்பாடுகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை மிகவும் நிதானமாக வெளிப்படுத்தினர்.

இதன்மூலம் இன்றைய பதற்றம் நிறைந்த சூழ்நிலையை மாற்றுவதில் பல்வேறு தரப்பட்ட மக்களும் காட்டும் ஆர்வத்தை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

மக்கள் இன்றைய தேசிய சர்வதேச சூழ்நிலைகளை நன்கு புரிந்து கொண்டு செயலாற்ற முயல்வது - முற்படுவது எமது பணியில் நாம் மேலும் ஆர்வமுடனும் உறுதியுடனும் செயற்படுவதற்கு எமக்கு உத்வேகம் அளிக்கிறது.

மக்களின் அபிலாஷைகளின் பக்கமே என்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நிலைதளம்பாமல் நின்று செயல்படும் என்பதையும் எம்முடன் பேச விரும்பும் வெகுஜன ஸ்தாபனங்களையும் பொதுமக்களையும் எச்சமயமும் சந்திக்கத் தயாராக உள்ளது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## நாளை....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தார்.

இது இவ்வாறு இருக்க இதுவரை சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் இந்த நிவாரணத்தைப் பெற விண்ணப்பித்துள்ளன

இந்த விண்ணப்பப் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி உடைய அனைவருக்கும் கட்டம் கட்டமாக நிவாரணம் வழங்கப்படும். (இ-5)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் பத்மநாதன் (செட்டியார்)**

தோற்றம்: 02-07-1930
மறைவு: 11-11-1987

ஆண்டொன்று முடிந்ததையா
அபரபக்ஷச் சஷ்டியிலே
மீண்டும் நீ வாராயோ மேதினிக்கு —
நீண்டதொரு
புத்தகத்திற் பாடிப் புகழ்ந்திடுவோம்
புதுமைமிகு
சித்திரத்தி லுங்காண் போம் சிறந்து.

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**

32/1, முருகமூர்த்தி ரோட்,
வண்ணார்பண்ணை.

(7660)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30-10-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 30th October 1988

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org